விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka


# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 312 வள்ளுவர் ஆண்டு 2056 ஐப்பசி 10 திங்கட்கிழமை (27.10.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



## துப்பாக்கிச் சூடுகளின் பின்னணியில் அரச முக்கியஸ்தர்கள் உள்ளனரா?



### ஐயம் கொள்கிறார் நாமல் எம்.பி


(கொழும்பு)

திட்டமிட்ட குற்றச் செயல்களில் ஈடுபடும் சில குழுக்கள் அரசாங்கத்தின் அனுசரணையின் கீழ் அரசியல் தஞ்சமடைந் துள்ளனவா? என்ற சந்தேகம் எழுகிறது.

இடம்பெற்றுக் கொண்டிருக்கும் துப்பாக்கிச்சூடுகளின் பின்னணியில் அரசாங்கத்தின் முக்கிய கதிரை களில் அமர்ந்திருப்பவர்கள் 16ஆம் பக்கம் பார்க்க

## செவ்வந்திக்கு உதவியவரின் யாழ்ப்பாண வீட்டில் ஆயுதங்கள் மீட்பு


### வவுனியாவிலும் ஒருவர் கைது



(யாழ்ப்பாணம்)

இஷாரா செவ்வந்தி இந்தி யாவுக்குத் தப்பிச் செல்வதற் 15ஆம் பக்கம் பார்க்க

## கவிஞர் வைரமுத்து யாழ்ப்பாணம் வருகை



(யாழ்ப்பாணம்)

தென்னிந்தியத் தமிழ்த் திரைப்பட பாடலாசிரியரும் கள்ளிக்காட்டு இதிகாசம் எழுதியவருமாகிய கவிப் பேரரசு வைரமுத்து அவர் 15ஆம் பக்கம் பார்க்க

## போதை ஒழிப்பு - தேசிய செயற்றிட்டம்

# போதையுடன் தொடர்பானவர்கள் கூண்டோடு அள்ளப்படுவர்

### அதிரடி ஆட்டம் ஒக்.30 இல் ஆரம்பம்

(கொழும்பு)



போதைப் பொருள் பேரழிவை வேரோடு ஒழிப்பதற்காக முழு நாடுமே ஒன்றாக – தேசிய செயற்றிட்டத்தின் அங்குரார்ப் பண நிகழ்வு எதிர்வரும் வியாழக்கிழமை 30ஆம் திகதி காலை 10 மணியளவில் கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையில் இடம்பெறும். *(15ஆம் பக்கம் பார்க்க)*

## ரணில் - சஜித் சங்கமிக்கும் ஏற்பாடுகள் தீவிரம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவும் சந்திப்பதற் கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இரு தரப்பு இணைவுக்காக இரு கட்சி களில் இருந்தும் குழுக் 15ஆம் பக்கம் பார்க்க

## லசந்த படுகொலை சூத்திரதாரி கைது

(கொழும்பு)

வெலிகம பிரதேச சபையின் தலைவர் லசந்த விக்கிரமசேகரவின் படுகொலையுடன் தொடர்புடைய பிரதான சூத்திரதாரி நேற்றி ரவு மஹரகமவில் வைத்துப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய பெண் உட்பட மூவர் நேற்று 15ஆம் பக்கம் பார்க்க

## பெருந்தொகையான வெடி மருந்துகள் மீட்பு

### மதவாச்சியில் சம்பவம்

(அநுராதபுரம்)

அநுராதபுரம், மதவாச்சி - வஹமல்கொல் லேவ பகுதியிலுள்ள கனதர ஓயாவில், ரி-56 ரக 41 வெடிமருந்து பொருட்கள் மற்றும் 2 வெடிமருந்து உறைகள் கண்டுபிடிக்கப்பட் டுள்ளன. 15ஆம் பக்கம் பார்க்க

## முல்லைக்கு கிழக்கே மொந்தாப் புயல்

### பேராசிரியர் பிரதீபராஜா

(யாழ்ப்பாணம்)

மத்திய வங்காள விரிகுடாவில் உருவான 'மொந்தா' என்ற புதிய காற்றழுத்த தாழ்வு மண்டலம் மேற்கு வடமேற்கு திசையால் நகர்ந்து வருகிறது என 02ஆம் பக்கம் பார்க்க

## நாடு இடர்பட்ட வேளைகளில் கூட ஒன்றிணையாத ரணில் - சஜித் சுயலாபத்துக்காக இணைவு

### சாடுகிறார் அமைச்சர் சமந்த



(கொழும்பு)

நாடு போர்க்கால இடர்களையும் பொரு ளாதார நெருக்கடிகளையும் சந்தித்தபோது கூட ஒன்றிணையாத ரணில் - சஜித் இன்று தமது சுய 15ஆம் பக்கம் பார்க்க

## பாதாள உலகுடன் டீல் வைத்திருந்த அரசியல்வாதிகள் நால்வர் அடையாளம்

### வேட்டை தொடரும் என்கிறார் அமைச்சர் ஆனந்த விஜேபால



(கொழும்பு)

அரசாங்கம் தற்போது மேற்கொண்டு வரும் விசா ரணைகளின் அடிப்படையில் நான்கு அரசியல்வாதி கள் பாதாள உலகக் குழுக்களுடன் தொடர்பில் உள் ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக 16ஆம் பக்கம் பார்க்க

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12 வயதுக்கு உட்பட்டவர்கள் ஸ்மார்ட்போன் பயன்படுத்தத்தடை

## ஆராய்கிறது அரசாங்கம்

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களில் 12 வயதிற்குட்பட்டோர் நவீன கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்துவதற்குத் தடை விதிக்க திட்டமிட்டுள்ளதாக, சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா போல்ராஜ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலும் கருத்துரைத்த அமைச்சர், 12 வயதுக்குக் குறைவான எந்தவொரு பிள்ளையும் நவீன கையடக்க தொலைபேசிகளை வைத்திருக்கவோ அல்லது பயன்படுத்தவோ அனுமதிக்கப்படமாட்டாது என்பதை உறுதிப்படுத்த அரசாங்கம் ஒரு தீர்க்கமான முடிவை விரைவில் எடுக்கும்.

மாணவர்கள் தவறிழைத்தால் அவர்களுக்கு தண்டனை வழங்குவது பொறுத்தமற்றது. பாசத்துடன் அறிவுரை கூறி அவர்களை நல்வழிப்படுத்த வேண்டும். சுய ஒழுக்கத்தையும் கட்டுப்பாடுகளையும் அவர்களுக்கு பழக்கப்படுத்த வேண்டும். சுய கட்டுப்பாடுடைய சமூகத்தை நாம் உருவாக்க வேண்டும்.

போதைப்பொருள் தொடர்பிலும் மாணவர்களுக்கு சுய ஒழுக்கம் கற்பிக்கப்பட வேண்டும். கையடக்க தொலைபேசி என்பது ஒரு விஷமாகும். அதில் குறுகிய காணொளிகள் மிக ஆபத்தானவை. பிள்ளைகளின் மூளை இயங்கும் வேகத்தை அவை கட்டுப்படுத்துகின்றன.

எனவேதான் அவற்றிலிருந்து பிள்ளைகளை வேறுபடுத்துமாறு பெற்றோரிடம் வலியுறுத்துகின்றோம். அவுஸ்திரேலியா, சீனா போன்ற நாடுகள் சிறுவர்கள் தொலைபேசி பாவிப்பதைத் தடைசெய்துள்ளன. அந்த வகையில் பாடசாலை மாணவர்கள் தொலைபேசி பாவிப்பதைத் தடை செய்வதற்கு நாம் திட்டமிட்டுள்ளோம்.

இந்தத் தடை மூலம், அதிகப்படியான திரைக் காட்சியில் இருந்தும், தீங்கு விளைவிக்கும் இணைய உள்ளடக்கத்தில் இருந்தும் பிள்ளைகளைப் பாதுகாத்து, ஆரோக்கியமான வளர்ச்சியையும் சமூகத் தொடர்பாடலையும் ஊக்குவிப்பதே அரசாங்கத்தின் நோக்கம் என்றார். (ந-7)

## முல்லைக்கு...

யாழ். பல்கலைக்கழக புவியியற்துறை தலைவர் பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

குறித்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் தற்போது முல்லைத்தீவுக்குக் கிழக்காக 749 கி.மீ. தொலைவில் காணப்படுவதோடு, அது இன்று 27ம் திகதி புயலாக மாற்றம் பெறும்.

இது 2025-2026 வடகீழ்ப் பருவக் காற்று காலத்தில் உருவாகவுள்ள முதலாவது புயலாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கு "மொந்தா" என்ற பெயரினைத் தாய்லாந்து நாடு வழங்கியுள்ளது. அதன்படி, மொந்தா புயல் இன்று 27ஆம் திகதிக்கு முன்பாக புயலாக மாறி வடமேற்கு, மேற்கு திசையில் நகர்ந்து,

28-ம் திகதி இரவு அல்லது 29-ம் திகதி காலை இந்தியாவின் ஆந்திர மாநிலத்தின் காக்கிநாடாப் பகுதியில் கரையைக் கடக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. அதேவேளை, இலங்கைக்கு இந்தப் புயலால் சேதமோ பாதிப்போ ஏற்படமாட்டாது.

இருப்பினும், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளில் நாளை 28 ஆம் திகதி வரை மிதமான மழை பெய்யக்கூடும்.

கிழக்கு கரையோரப் பகுதிகளில் குறிப்பாக வடமராட்சி கிழக்கு, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை அருகிலான இடங்களில் கனமான மழை மற்றும் இடியுடன் கூடிய மின்னல் ஏற்படக் கூடும்.

மேலும், இன்று வடக்கு மற்றும் கிழக்கு கடற்பகுதியில் கொந்தளிப்பான நிலை காணப்படும் என்பதனால் மீனவர்கள் கடலுக்குச் செல்வதை தவிர்க்க வேண்டும்.


வளிமண்டலத்தில் காணப்படும் ஈரப்பதன் முழுவதையும் இந்தப் புயல் உள்ளீர்த்துக் கொள்ளும் என்பதனால் நாளை 28.10.2025 - 06.11.2025 வரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு எதிர்பார்த்த அளவுக்கு மழை கிடைக்காது.

ஆனாலும் பருவக் காற்று காரணமாக அவ்வப்போது சில பகுதிகளுக்கு மிதமான மழை கிடைக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-7)


FORKLIFT வாடகைக்கு விடப்படும்

FORKLIFT வாகனம் மணித்தியால அடிப்படையில் வாடகைக்கு விடப்படும்.

CLAMP MODEL FORKLIFT



076 097 3121



வீடு வாடகைக்கு தேவை

கோப்பாய், திருநெல்வேலி, இருபாலை, கட்டப்பிராய், கல்வியங்காடு பகுதிகளில் மூன்று பேர் வசிக்கக்கூடிய வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு - 077 877 7296

(C-4198)



உங்கள் இல்லங்களில் இருந்தவாறே வலம்புரியில் விளம்பரம் செய்யும் வாய்ப்பு

அன்பு வாசகர்களே!

உங்கள் வீட்டில் இடம்பெறும் நிகழ்வுகள் மற்றும் வர்த்தக விளம்பரங்களை எவரது உதவியுமின்றி உங்கள் வலம்புரியில் நேரடியாகப் பிரசுரிக்க முடியும்.

தொடர்புகளுக்கு :

தொலைபேசி:

076 097 3127

021 221 7603

/ - 076 636 3378

E.mail: Valampurii@yahoo.com



கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் சித்திர பாட ஆசிரியர் **ப.அஜீவன்** அவர்களின் அன்புத் தந்தையார்

அமரர்

**கோ.பஞ்சலிங்கம்**

பிறப்பு: 20.07.1956 இறப்பு: 26.10.2025

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/மல்லாகம் மகா வித்தியாலயம்

(5748)



ஓராண்டு நினைவேந்தல்



கலாபூஷணம் செல்வி
தங்கலட்சுமி செல்லத்துரை
(ஓய்வுபெற்ற ஆசிரியர் - யாழ்.இந்துக் கல்லூரி
சங்கீதபூஷணம் - அண்ணாமலை
பல்கலைக்கழகம்)

இசைக்குயில் ஒன்று இளைப்பாறியதோ
இந்துக் கல்லூரியின் இனியகானம் ஓய்ந்ததுவோ
இனிமையாகப் பேசி இன் முகத்துடன் வரவேற்ற
இனிய முகம் மறைந்ததுவோ
இனியொரு இனிமைக்குரல் கேட்க
உள்ளம் ஏங்குதம்மா
இறைவன் அடியில் இங்கிதமாய்
இசைக்கச் சென்றீர்களோ!

(1678)

48/7, பழம் வீதி,
[illegible] யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீரற்ற காலநிலையால் 29 ஆயிரம் பேர் பாதிப்பு!

## அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தகவல்

**(கொழும்பு)**

**கடந்த சில நாட்களாக நிலவும் சீரற்ற வானிலையால் நாடளாவிய ரீதியில் 18 மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.**

அதன்படி, சீரற்ற வானிலையால் 7,395 குடும்பங்களைச் சேர்ந்த மொத்தம் 29,414 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.



இந்நிலையில், தொடர்ச்சியான மழை வீழ்ச்சியினால் 11 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு எச்சரிக்கைகள் மேலும் நீடிக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி அமைப்பின் சிரேஷ்ட ஆய்வாளர் கலாநிதி வசந்த சேனாதீர அறிவித்துள்ளார்.

அத்துடன், இதுவரை பெய்த பலத்த மழையின் விளைவாக நில்வளவை கங்கை, ஜின் கங்கை, களு கங்கை மற்றும் அத்தனகலு ஓயாவின் நீர்மட்டம் உயர்மட்டத்தில் இருப்பதாக நீர்ப்பாசனத் துறை தெரிவித்துள்ளது. (நி)

# 'கல்விச்சபை' என்ற பெயரில் இயங்கும் மோசடி வட்ஸ்அப் குழு

## கல்வி அமைச்சு எச்சரிக்கை

(கொழும்பு)

புதிய கல்வி சீர்திருத்தங்கள் மூலம் உருவாக்கப்படும் கல்வி சபை என்ற பெயரில் இயங்கும் மோசடி வட்ஸ்அப் குழு தொடர்பில் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு, பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

கல்வி செயற்பாடுகளில் ஈடுபடும் அனைத்து ஆசிரியர்களையும் ஒன்றிணைப்பதாகக் கூறப்படும் இந்தக் குழு, எந்த வகையிலும் அமைச்சுடன் இணைந்து செயற்படவில்லை எனவும் அதனால் அங்கீகரிக்கப்படவில்லை எனவும் அறிக்கையொன்றினூடாக தெரிவித்துள்ளது.

வட்ஸ் அப் மூலம் மேற்கொள்ளப்படும் எந்தவொரு தகவல்தொடர்புகள் அல்லது செயற்பாடுகளுக்கும் அமைச்சு பொறுப்பேற்கமாட்டாது என அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர்.

கல்வியியலாளர்கள் மற்றும் பொதுமக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் எனவும், அரசாங்கத்தின் புதிய கல்வி சீர்த்திருத்த முயற்சியை குறைமதிப்பிற்கு உட்படுத்த முயற்சிக்கும் குழுக்களால் தவறாக வழிநடத்தப்படுவதைத் தவிர்க்க வேண்டும் எனவும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு வலியுறுத்தியுள்ளது. (நி)

# முக்கிய பிரமுகர்களுக்கு கொலை மிரட்டல் தீவிரப்படுத்தப்படும் பாதுகாப்பு

(கொழும்பு)

மேல் மாகாணத்தின் முக்கிய பிரமுகர்கள் உட்பட 25 பேருக்கு ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளால் கொலை மிரட்டல்கள் விடுக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதன்படி, பொலிஸ் மா அதிபரின் அறிக்கையில் குறித்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பொலிஸ் மா அதிபரின் குறித்த அறிக்கையை தொடர்புபட்ட அதிகாரிகளுக்கு ஏற்கனவே அனுப்பியுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இந்தநிலையில், அவர்களின் பாதுகாப்புக்கு தேவையான நடவடிக்கைகளைத் திட்டமிடுவதற்காக இந்த அறிக்கை அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, குறித்த 25 பேரினுள் பெரும்பாலானவர்களின் பாதுகாப்புத் தொடர்பில் தொடர்புபட்ட அதிகாரிகள் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

அண்மையில் வெலிகம பிரதேசசபைத் தலைவர் லசந்த விக்ரமசேகர அடையாளம் தெரியாத நபர்களால் சுட்டுக் கொலை செய்யப்பட்டிருந்தார்.

இந்தநிலையில் அவர் உயிரிழப்பதற்கு முன்னர் தனது உயிருக்கு அச்சுறுத்தல்கள் இருப்பதாக பொலிஸில் முறைப்பாடு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் தினமும்

(யாழ்ப்பாணம்)

யா/சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலயத்தின் 115 ஆவது ஆண்டு பரிசளிப்பு விழா, நிறுவுநர் தினமும் அதிபர் தினமும் எதிர்வரும் 3 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 1.05 மணிக்கு வித்துவான் விருத்தாசலம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பாடசாலை முதல்வர் எம்.சி.சுதாகரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் தொழில்நுட்பவியல் கல்லூரியின் பணிப்பாளர் ஆறுமுகம் நற்குணேஸ்வரன், சிறப்பு விருந்தினராக மக்கள் கலை இலக்கிய பேரவையின் அமைப்பாளரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான சோமசுந்தரம் தேவராஜா, கௌரவ விருந்தினர்களான பாடசாலை முன்னாள் ஓய்வுநிலை அதிபர்களான நமசிவாய தேசிகர் பாலச்சந்திரன் மற்றும் சிங்காரம் திவாகரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

அத்துடன் ஆசியுரையினை பனிப்புலம் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான ஆதீன கர்த்தாவும் பிரதம குருவுமாகிய சிவஸ்ரீ பேரின்பஇன்பராஜ் குருக்கள் வழங்கவுள்ளதுடன் நிறுவுநர் நினைவுப்பேருரையினை சட்டத்தரணி செல்வி தர்சிகா முருகராசா நிகழ்த்தவுள்ளார். (3)

# AI பயன்பாட்டின் அசுர வளர்ச்சி இலங்கை தொழிலாளர்களுக்கு ஆபத்து?

## உலக வங்கி அறிக்கை

(வோஷிங்டன்)

தெற்காசியாவில் சற்ஜி.பி.ரியை அதிகமாக பயன்படுத்தும் நாடாக இலங்கை இரண்டாவது இடத்தில் உள்ளதென உலக வங்கி தனது அறிக்கையொன்றில் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கை உட்பட தெற்காசியாவில் செயற்கை நுண்ணறிவு பயன்பாடு வேகமாக அதிகரித்துள்ளதாகவும், தெற்காசியாவின் AI பயன்பாடு தொழிலாளர் சந்தையில் ஏற்படுத்தும் தாக்கம் தொடர்பில் உலக வங்கி தனது அறிக்கையொன்றில் சுட்டிக்காட்டியுள்ளது.

தெற்காசியாவில் நேபாளம் மற்றும் இந்தியாவுடன் ஒப்பிடும்போது, அதிக AI பயன்படுத்துவோர் கொண்ட தொழிலாளர் சக்தியைக் கொண்ட நாடுகளாக பூட்டானும் இலங்கையும் மாறியுள்ளன.

இலங்கையில் AI மனித திறன்களுடன் தொழில்நுட்பத்தைச் சேர்ப்பதில் குறைந்த முன்னேற்றம் இருப்பதையும்,

திறன்களை மேம்படுத்தாமல் AI விரைவாக பயன்படுத்தப்படுமானால் வேலை இழப்புகள் ஏற்பட வாய்ப்பு இருப்பதையும் அந்த அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. AI காரணமாகவே, தெற்காசியாவில் வேலைவாய்ப்புகளில் சுமார் 7% பணிகள் ஆபத்தில் உள்ளன.

குறிப்பாக அழைப்பு மைய அதிகாரிகள், கணக்காளர்கள், கணனி மென்பொருள் தொடர்புடைய பணிகளுக்கு வேலைவாய்ப்பு அறிவிப்புகள் குறைந்துள்ளன.

இலங்கையின் நிதித் துறை, தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொழில்முறை சேவைகளுக்கு AI பயன்பாடு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்றும்,

இலங்கையில் வலுவான AI வேலைவாய்ப்புச் சந்தை இருக்க வேண்டும் என்றும் உலக வங்கி அறிக்கை கூறுகிறது.

அதன்படி, டிஜிற்றல் திறன்களை மேம்படுத்துதல், STEM கல்வியை விரிவுபடுத்துதல், நம்பகமான மின்சாரம் மற்றும் இணைய உட்கட்டமைப்பில் முதலீடு செய்தல்,

அத்துடன் தொழிலாளர் நகர்வு மற்றும் வேலைவாய்ப்பு வசதி அமைப்புகளை மேம்படுத்துதல் ஆகியவை முக்கியம் என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 16.10.2025 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் குடும்பத்தலைவர்

அமரர்.
நாகரத்தினம் விக்கினேஸ்வரன்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் 29.10.2025 புதன்கிழமை காலை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 31.10.2025 வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


அன்னாரின் மறைவுச் செய்தியறிந்து நேரில் வந்தும் தொலைபேசி மூலமாகவும் எம் துயரில் பங்குகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எம் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

(5744)

தகவல்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற தளர்வு சிகிச்சை நிகழ்வில் அங்கு சேவையாற்றும் தாதியர்களுக்கு யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில் சார்பாக மன வளக்கலை பயிற்சிகள் கற்றுக்கொடுக்கப்பட்டது. பயிற்சிகளை பேராசிரியர் கே.ஆர்.முனிரத்தினம் (தமிழ்நாடு) வழங்கியிருந்தார்.

# இறுதி ஒருநாள் போட்டியில் இந்தியாவிற்கு ஆறுதல் வெற்றி



அவுஸ்திரேலியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய கிரிக்கெட் அணி 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் பங்கேற்றுள்ளது. இதில் பெர்த் மற்றும் அடி லெய்டில் நடந்த முதல் இரு ஆட்டங்களிலும் அவுஸ்திரேலியா வெற்றி பெற்று தொடரையும் 2-0 என்ற கணக்கில் கைப்பற்றி விட்டது.

இந்நிலையில் இந்தியா-அவுஸ்திரேலியா இடையிலான 3 ஆவது மற்றும் இறுதி ஒரு நாள் போட்டி சிட்னியில் நேற்று முன்தினம் நடைபெற்றது. நாணய சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலியா அணி கப்டன் மிட்சல் மார்ஷ் துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தார். அதன்படி அவுஸ்திரேலியா அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

தொடக்க ஆட்டக்காரர்களாக களமிறங்கிய ட்ராவில் ஹெட் 29 ஓட்டங்களிலும் மிட்செல் மார்ஷ் 41 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். மேத்யூ ஷார்ட் 30 ரன்னிலும் நிதானமாக விளையாடிய ரென்சா அரைசதம் அடித்து 56 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

இதனையடுத்து களமிறங்கிய அவுஸ்திரேலிய வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்து வெளியேற 46.4 ஓவர்கள் முடிவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 236 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

இந்திய தரப்பில் ஹர்ஷித் ரானா 4 விக்கெட்டுக்களையும், வாஷிங்டன் சுந்தர் 2 விக்கெட்டுக்களையும் அதிகபட்சமாக வீழ்த்தினர்.

இதனையடுத்து களமிறங்கிய இந்திய அணி 38.3 ஓவர்கள் முடிவில் 1 விக்கெட் இழப்பிற்கு 237 ஓட்டங்கள் எடுத்து எளிதாக வெற்றி பெற்றது.

அதிரடியாக விளையாடிய ரோகித் சர்மா சதமடித்து அசத்தினார். விராட் கோலி அரைசதம் அடித்து தன் மீதான விமர்சனத்திற்கு முற்றுப் புள்ளி வைத்தார். இறுதிவரை ஆட்டமிழக்காமல் விளையாடிய ரோகித் 121 ஓட்டங்களும் விராட் கோலி 74 ஓட்டங்களும் எடுத்தனர்.

இந்த போட்டியில் வெற்றி பெற்றாலும் ஒருநாள் தொடரை 2-1 என்ற கணக்கில் அவுஸ்திரேலியா கைப்பற்றியது குறிப்பிடத்தக்கது. (3)

# தெற்காசியாவின் புதிய வேக மங்கையாக இலங்கையைச் சேர்ந்த சபியா யாமிக்




தெற்காசியாவில் மிக வேகமான பெண் என்ற சாதனையை இலங்கையைச் சேர்ந்த ருமேஷிகா ரத்னாயக்க 11.60 செக்கனில் வைத்து இருந்தார்.

வேகமான ஆண் என்ற சாதனையை இலங்கையைச் சேர்ந்த யுபுன் அபேகூன் 9.96 செக்கனில் வைத்து இருந்தார்.

இந்த நிலையில் கண்டியைச் சேர்ந்த சபியா யாமிக் 11.53 செக்கனில் நிறைவு செய்து 200 கோடி மக்கள் வாழும் தெற்காசியாவின் புதிய வேக மங்கை என்ற சாதனையைப் புரிந்துள்ளார். பொதுவாக மெய்வல்லுநர் சாதனைகளில் இலங்கை முன்னணியில் இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (3)








யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்தின் வெள்ளைப்பிரம்பு பாதுகாப்பு தினமானது நன்கொடையாளர்களின் நிதிப்பங்களிப்போடு கடந்த 15 ஆம் திகதி யாழ்.விழிப்புலனற்றோர் சங்க பிரதான அலுவலகத்தில் நடைபெற்றது.

யாழ்.விழிப்புலனற்றோர் சங்க தலைவர் யோ.சுதாகரன் தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவில் முதன்மை விருந்தினராக மேலதிக அரசாங்க அதிபர் கைலாசபிள்ளை சிவகரன், சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக சட்டபீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி. கோசலை மதன், கௌரவ விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலக சமூகசேவை உத்தியோகத்தர், திருமதி.விஜயகுமாரி முகுந்தன் கலந்து கொண்டதுடன் ஆசியுரையினை தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன் நிகழ்த்தியிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளவளத்துணையாளர் பணிக்கான விண்ணப்பம் கோரல்

கிளிநொச்சி ஜெயந்தி நகரில் அமைந்துள்ள மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தில் பணியாற்றுவதற்கு ஆண், பெண் உளவளத்துணையாளர்கள் தேவை. பின்வரும் தகைமைகளினை உடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

பணியாற்ற விரும்புவோர் 03.11.2025 இற்கு முன் கீழ்க்காணும் முகவரிக்கு தங்களது விண்ணப்பத்தினை பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். விண்ணப்ப முடிவுத் திகதியின் பின்னர் விண்ணப்பதாரர்களுக்கு நேர்முகத் தேர்விற்கான திகதி அறிவிக்கப்படும்.

தகைமைகள்

1. க.பொ. த. உயர்தர சித்தியுடன் உளவியல் துறையில் டிப்ளோமா அல்லது பட்டத்தினைப் பெற்றிருத்தல்.
2. வயதெல்லை 25-50 வயதிற்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.
3. தங்கியிருந்து கடமையாற்றுபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
4. தொழில் முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

அனுப்பவேண்டிய முகவரி

**தலைவர், மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்,**
**ஜெயந்திநகர், கிளிநொச்சி,**
**021 492 3118/ 077 324 0950**

(C-4195)

# வவுனியா பொலிஸ்மா அதிபர் காரியாலயத்தில் ‘பொதுமக்கள் குறைதீர் நாள்’ அறிமுகம்



(வவுனியா)

மாதத்தில் இரண்டு நாட்கள் மக்கள் சந்திப்பை மேற்கொள்ள தீர்மானித்துள்ளதாக வவுனியா - மன்னார் மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் இந்திக்க கப்புகொட்டுவ தெரிவித்துள்ளார்.

வவுனியா மற்றும் மன்னார் மாவட்ட மக்களின் பிரச்சினைகளை இனங்கண்டு அதனை தீர்க்கும் பொருட்டு மாதத்தில் இரண்டு நாட்கள் "பொதுமக்கள் குறைதீர்" நாளாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

அதற்கமைவாக, வவுனியா பிரதி பொலிஸ் மா அதிபர் காரியாலயத்தில் மாதத்தின் முதலாவது மற்றும் மூன்றாவது புதன் கிழமைகளில் பிரதி பொலிஸ் மா அதிபரை சந்தித்து பொது மக்கள் தமது பிரச்சினைகள் தொடர்பில் முறைப்பாடு செய்ய முடியும் என தெரிவித்தார். (8-250)

# பிரதேச சபையின் பெயரில் வட்சப்குழு நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரிப் பிரதேசசபையின் பெயரைப் பயன்படுத்தி தனிநபர் ஒருவர் வட்சப் குழு ஊடாக அவதூறான செய்திகளைப் பரப்பிவருவதாகவும் அவர் மீது சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பிரதேசசபையின் உபதவிசாளர் இ.யோகேஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

அண்மையில் பிரதேசசபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் இவ் விடயத்தை சுட்டிக்காட்டியிருந்தார். இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

மேற்படி சட்டவிரோத வட்சப் குழுவில் பிரதேசசபை உத்தியோகத்தர்கள் மற்றும் சில உறுப்பினர்களும் இணைக்கப்பட்டுள்ளனர்.

அதில் சபை மற்றும் உத்தியோகத்தர்களுக்கு களங்கம் ஏற்படுத்தும் விதமான தகவல்கள் பகிரப்படுகின்றன. சபையின் பெயரைப் பயன்படுத்தி ஆரம்பிக்கப்பட்டுள்ள வட்சப் குழு உடனடியாக நீக்கப்பட வேண்டும்.

இல்லையேல் பிரதேசசபை மேற்படி வட்சப் குழுவை இயக்கும் நபர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்தார். (8-30)

# யாழ்ப்பாண மாநகரசபை

**யாழ்ப்பாணம் செங்குந்தா சந்தைக்கடைகள் Stage 1, 2,3 கல்வியங்காடு, குத்தகை அடிப்படையில் வாடகைக்கு வழங்குவதற்கான விலை மனுக்கோரல்**

1. யாழ்ப்பாணம் செங்குந்தா சந்தைக்கடை, கல்வியங்காடு கீழ்வரும் கடைத் தொகுதிகள் குத்தகை அடிப்படையில் வாடகைக்கு வழங்குவதற்கான விலை மனுக்கள் கோரப்படுகின்றன.

| கடை இல | அளவு | மீளளிக்கக்கூடிய வைப்புப்பணம் மூன்று மாத வாடகை (வரி நீங்கலாக) | 20 வருட வாடகை (Key Money) (வரி நீங்கலாக) |
|---|---|---|---|
| Stage1- கீழ்தளம் | | | |
| 01 | 883sq.ft | 90,000.00 | 7,200,000.00 |
| Stage2- கீழ்தளம் | | | |
| 06 | 146sq.ft | 6,750.00 | 540,000.00 |
| 09 | 124sq.ft | 13,500.00 | 1,080,000.00 |
| Stage1 ,2, 3- மேற்தளம் மண்டபம் | | | |
| 01 | 2329sq.ft | 195,000.00 | 15,600,000.00 |

2. சமர்பிக்கப்படும் விலைமனுக்களில் கோரப்பட்ட அதிகூடிய விலையைக் கவனத்தில் கொண்டு குத்தகைதாரர் தேர்ந்தெடுக்கப்படுவார்.
3. கேள்வி விண்ணப்பம் பெறுபவர் தேசிய அடையாள அட்டைப்பிரதி மற்றும் வதிவிடத்தினை உறுதிப்படுத்தும் கிராமசேவை உத்தியோகத்தரது கடிதம் என்பன சமர்ப்பிக்க வேண்டும்.
4. கேள்வியை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்பதற்கும் நிராகரிப்பதற்கும் கேள்விசபைக்கு அதிகாரம் உண்டு.
5. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற விண்ணப்பதாரிகள் குறித்த விபரங்கள் உள்ளடக்கிய விண்ணப்பங்களை, மீளளிக்கப்படாத ரூபா1,000.00 + vat 18% இனை செலுத்தி மாநகர சபையின் நானாவித இறைவரிப்பகுதியில் 27.10.2025 ஆம் திகதி முதல் 13.11.2025 ஆம் திகதிவரை வாரத்தில் வேலை நாட்களில் மு.ப 9.00 முதல் பி.ப 2.30 வரையான காலப்பகுதியில் பெற்றுக்கொள்ளலாம்.
6. விண்ணப்பதாரர் மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்படும் தொகையை பிணைமுறியாக செலுத்துதல் வேண்டும்.
7. விலை மனுக்களை ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும் / நானாவித இறைவரிப்பகுதியில் கேள்விப் படிவங்களை ஏற்கும் பெட்டியில் இடுமாறு கோரப்படுகின்றது. அத்துடன் தபால் உறையின் மேல் மூலையில் கேள்வியின் விபரம் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். குறித்த நேரத்தின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
8. விலைமனுக்களை ஏற்றல் 14.11.2025 ஆம் திகதி மு.ப10.00 மணிக்கு முடிவடைந்ததுடன் மாநகரசபையின், பௌதிக திட்டமிடல் கேட்போர் கூட்டத்தில் 14.11.2025 ஆம் திகதி மு.ப10.00 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும். விண்ணப்பதாரர்கள் அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் இதற்கு சமுகமளித்தல் வேண்டும்.
9. இதுபற்றிய மேலதிக தகவல்கள் அல்லது நிபந்தனைகள் தேவைப்படின் யாழ்ப்பாணம் மாநகர சபை நானாவித இறைவரிப்பகுதியின் 021-221 5978 தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொள்வதன் மூலம் அல்லது அலுவலக நேரங்களில் தகவல்களை பெற்றுக் கொள்ளலாம்.

**மாநகர முதல்வர்,**
**மாநகரசபை,**
**யாழ்ப்பாணம்.**

(C-4193)

# Poonakary Divisional Secretariat INVITATION FOR BIDS (IFB) – 2025

**Supply & Installation of Hybrid 50Kw Roof top Solar System at Poonakary Divisional Secretariat PNY/DS/FIN/QUO/08/2025/57**

The Chairman, Regional Procurement Committee invites sealed bids from interested eligible and qualified bidders for the above procurements.

1. Bidding Procedure will be conducted through National Competitive Bidding process.
2. A complete set of bidding documents could be purchased **from 27.10.2025 till 07.11.2025** between 9.00Hrs to 15.30Hrs on working days. Upon submission of,
   a. **Bank Slip** Rs.2,500/= paid to the **Bank of Ceylon** Account No. **7041987** of **"Divisional Secretary, Poonakary"** as non - refundable fee.
   b. **"Application for Bid Documents"** available in the Divisional Secretariat
3. A Pre Bid Meeting will be held on 04.11.2025 **at 10.00Hrs at Mini Conference Hall,Divisional Secretariat, Poonakary**
4. A bid Security for the amount of Rs. 150,000/- should be annexed with bid documents.
5. The duly completed Bids must be delivered to **"Chairman, Regional Procurement Committee, Divisional Secretariat, Poonakary"** or deposited in the "Procurement Box" available in the Accountant's Room, Finance Branch on or before **11.30 Hrs on 10.11.2025** Bids will be opened immediately after the closing of bids. Bidders or their authorized representatives are allowed to be present at the time of opening of the Bids.
6. All rights are reserved to the Chairman of RPC to accept, reject or partially accept of any bids at any stage without paying any compensation to any party.

**Chairman,**
**Regional Procurement Committee (RPC),**
**Poonakary Divisional Secretariat.**
**Tel.No:- 021 206 0818, Fax No:- 021 206 0803**
**Web Address:- www.poonakary.ds.gov.lk**

(C-4194)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










முல்லைத்தீவு மாவட்ட பண்பாட்டுப் பெருவிழா மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவில் கடந்த 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவிற்கு பிரதம அதிதியாக முன்னாள் வடமாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன் கலந்து சிறப்பித்தார். தொடர்ந்து கலை நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் முது கலைஞர்களுக்கு "முல்லை கலைக்கோ" விருதுகளும் இளங்கலைஞர்களுக்கு "இளஞ்சுடர்" விருதுகளும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

## மாடுகளைத் திருடிய மூன்று திருடர்கள் கையும் களவுமாக மடக்கிப் பிடிப்பு மன்னாரில் சம்பவம்



(மன்னார்)

மன்னார் நானாட்டானில் மாடுகளைத் திருடிய மூவர் கையும் களவுமாக பிடிபட்டனர்.

மன்னார் -நானாட்டான் பிரதேசத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மதியம் மாடுகளைத் திருடிய நபர்களை அப்பகுதியை சேர்ந்த இளைஞர்கள் மடக்கிப் பிடித்துள்ளனர்.

இரண்டு மாடுகளை திருடிய நிலையிலே மூவர் இவ்வாறு பிடிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது.

நானாட்டான் பிரதேசத்தின் உமநகரி வீதியில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு மாடுகளைக் கொண்டு செல்வதற்காக. சந்தேகிக்கும் வகையில் ஆட்டோவில் சுற்றித்திரிந்த மூவர் அப்பகுதி இளைஞர்கள் சிலரைப் பார்த்தவுடன் தப்பி ஓடியுள்ளனர் .

குறித்த இளைஞர்கள் அவர்களைத் துரத்திச் சென்று மன்னார் தள்ளாடி பெரிய பாலத்தடியில் பிடித்து மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

குறித்த நபர்கள் மன்னார் நகரப் பகுதியில் சாவற்கட்டு, மற்றும் சாந்திபுரம் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் திருடப்பட்ட மாடுகள் கட்டைக்காடு மற்றும் உமநகரி கிராமங்களைச் சேர்ந்த உரிமையாளர்கள் உடையது எனவும் தெரிய வந்துள்ளது.

குறித்த இரு மாடுகளும் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் முருங்கன் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டிற்கு அமைவாக முருங்கன் பொலிஸார் சம்பவ இடத்திற்கு வருகை தந்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

நானாட்டான் பிரதேசத்தில் மேய்ச்சல் நிலம் இல்லாத நிலையிலும் பாரிய சிரமப்பட்டு வளர்க்கும் கால்நடைகள் தொடர்ச்சியாக களவாடப்பட்டு வருவதாக கால்நடை வளர்ப்பாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (8-285)

## வவுனியாவில் மீற்றர் வட்டி அதிகரிப்பு சட்டநடவடிக்கை எடுக்கப்படும் ஜெகதீஸ்வரன் எம்.பி

(வவுனியா)

வவுனியாவில் அதிகரித்து வரும் மீற்றர் வட்டி மற்றும் போதைப்பொருள் மாபியா வுக்கு எதிராக மக்கள் தகவல்களை எமக்கோ அல்லது பொலிஸாருக்கோ வழங்கினால் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளரின் கேள்வி ஒன்றுக்கு பதில் அளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியாவில் அதிகரித்து வரும் மீற்றர் வட்டி மற்றும் போதைப்பொருள் மாபியாவுக்கு எதிராக மக்கள் தகவல்களை எமக்கோ அல்லது பொலிஸாருக்கோ வழங்கலாம். அவ்வாறு வழங்கினால் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அத்துடன், மக்களிடம் அதிகமான காசோலைகளை பெற்றுக் கொண்டு அதை அடிப்படையாகக் கொண்டு மிரட்டப்பட்டு சொத்துக்களை இழந்தவர்களும் தொடர்பு கொள்ள முடியும்.

வன்னியின் பல பகுதிகளில் போலியான ஆவணங்கள் மற்றும் உறுதிகள் மூலம் மோசடிகள் இடம்பெற்றுள்ளன. இது தொடர்பில் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் ஊடாக தகவல்கள் திரட்டப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

மேலும், போதைப் பொருள் கடத்தல் உள்ளிட்ட சட்ட விரோதச் செயற்பாடுகளை மேற்கொள்பவர்கள் மற்றும் அச் செயற்பாடுகள் மூலம் சொத்து சேர்த்தவர்கள் தொடர்பாகவும் முறைப்பாடுகளை செய்ய முடியும். அவ்வாறு செய்வதன் மூலம் உரிய வகையில் விசாரணை நடத்தப்பட்டு சட்டநடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார். (8-250)

# ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கும் தவத்திற்கு ஒப்பானது கந்தசஷ்டி

ஐப்பசி மாத வளர்பிறையில் அமாவாசையை அடுத்து வரும் பிரதமை திதி முதல் சஷ்டி திதி ஈறாக ஆறு நாட்கள் கந்தசஷ்டி விரதம் கந்தப்பெருமானுக்கு அனுஷ்டிக்கப்படுகிறது.

**ஆறு நாள் போரும் சூரசம்ஹாரமும்**

பரமேஸ்வரனுக்கும் பார்வதி தேவிக்கும் குமாரனாக உதித்த முருகப்பெருமான், தேவர்களுக்குச் சொல்லொணாத் துன்பம் செய்த சூரபத்மன், சிங்கமுகன், பானுகோபன் போன்ற கொடிய அசுரத் தலைவர்களையும் அசுர குலத்தையும் ஆறுநாள் போரில் அடக்கி ஒடுக்கி சம்ஹாரம் செய்தார்.

வேலினால் சூரபத்மனைப் பிளந்த முருகப் பெருமான் அவனின் ஒரு பகுதியை மயில் வாகனமாகவும் மற்றைய பகுதியைச் சேவல் கொடியாகவும் தமதாக்கி ஆட்கொண்டு தேவலோகத்தைக் காத்தருளினார்.

'ஆறாறையும் நீத்து அதன்மேல் நிலையை
பேறா அடியேன் பெறுமாறு உளதோ
சீறாவரு சூர் சிதைவித்து
கூறா உலகம்' குளிர்வித்தனே!

என்பது இந்த சூரசம்ஹாரத்தை எடுத்து உரைக்கும் கந்தரநுபூதிப் பாடலாகும்.

சகல ஜீவராசிகளுக்கும் தாயாய் தந்தையாய் இறைவனாய் இருந்து பரிபாலிக்கும் கந்தவேள் யாரை அழிப்பது? யாரைக் காப்பது? மறக்கருணையால் அசுரர்களின் அசுர-இயல்பை அழித்து தேவ-இயல்புடன் அவர்களை ஆட்கொண்ட திருவிளையாடலே சூரசம்ஹாரம்.எமது வாழ்க்கைத் தத்துவத்தை விளக்குவதற்கு ஏற்பட்ட ஒருபுற உபசாரத் திருவிளையாடலே கந்தவேளுக்கும் அசுரப் படைக்கும் இடையில் நடந்த போரும் சூரசம்ஹாரமும்.



பிரபஞ்ச வாழ்வும் ஒரு தொடர்ச்சியான போராட்டமே. ஒவ்வொருவரின் உள்ளத்தில் எழுகின்ற தேவ இயல்பு களுக்கும் அசுர இயல்புகளுக்கும் இடையில் போரும் பூசலும் சூரசம்ஹாரமும் நடைபெற்றுக் கொண்டேயிருக்கின்றன.

எம்மில் எழும் அகங்காரம், காம குரோத, மத மாச்சர்ய விருத்திகளே அசுரத் தலைவர்கள் என்றும் தீய எண்ணங்களே அசுரப்படை என்றும் இந்த அசுர இயல்புடன் தொடர்ச்சியாக விடாது போராடி அடக்கி, ஒடுக்கி அழித்து தற்போது அடைய வேண்டும் என்பதே மனித வாழ்கையின் குறிக்கோளாகும்.

"நாம் எம் உடம்பை பெற்றது இறைவனை வணங்கி முத்தியடைவதற்கே" என்பது ஆன்றோர் மொழி.

இந்த இலக்கை அடைவதற்கு பல சாத னங்களுள் கந்தசஷ்டி ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கும் தவத்துக்கு ஒப்பான ஒரு கடும் நோன்பாகும். கந்தசஷ்டி விரதம் முருகப் பெருமானுக்கு உரிய விதங்களுள் முதன்மையானதாகும். இதை முறைப்படி அனுஷ்டிப்போர் மற்ற எல்லா விரதங்களையும் நோற்ற பலனைப் பெறுவார் என்பது ஆன்றோர் அனுபவ வாக்கு. கந்தசஷ்டி விரதம் ஆறு நாட்களை உள்ளடக்கியது. ஆறு நாட்களும் முழு விரதமிருப்போர் பூரண உபவாசமிருந்து ஏழாம் நாள் காலை பாரணை பண்ணுவர். அவ்வாறு அனுஷ்டிக்க இயலாதவர்கள் முதல் ஐந்து நாட்களும் பால், இளநீர், பழம் ஏதாவது உட்கொள்ள ஆறாவது நாளாகிய சஷ்டியிலாவது பூரண உபவாசமிருக்க வேண்டும்.

மதுரகவி.காரை.எம்.பி.அருளானந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள்கேள்வி அறிவித்தல் - 2026
## கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி.

கரைச்சி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள சந்தைகள், இறைச்சிக்கடைகள் உள்ளிட்ட குத்தகை நிலையங்களை 2026.01.01-2026.12.31 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு விடுவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக கோரப்படுகின்றன.

**கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 2025.10.27-2025.11.10**
**(அலுவலக நாட்களில் மு.ப 09.00 - பி.ப 01.00)**

**கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி :-2025.11.11**
**செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணி**

**கேள்வித்திறக்கும் திகதி:-2025.11.11 செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணி**

**கேள்வித்திறக்கும் இடம் :- கரைச்சி பிரதேசசபை தலைமை அலுவலகம்.**

கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை எம்மால் வழங்கப்பட்ட கடித உறையில் தவிசாளர்/செயலாளர், கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி என முகவரியிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக குறிப்பிட்டு 2025.11.11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவு தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். அல்லது பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் வைக்கப்படும் கேள்வி பெட்டியினுள் மேற்குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னர் இடப்பட வேண்டும்.

இரண்டாவது பிரதியை உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி என முகவரியிட்டு குறித்த திகதிக்கு முன்னர் கிடைக்கும் வகையில் பதிவு தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

கேள்விகள் யாவும் **2025.11.11** ஆம் திகதி **செவ்வாய்க்கிழமை** மு.ப 10.00 மணிக்கு கரைச்சி பிரதேச சபையில் கேள்விச் சபை முன்னிலையில் திறக்கப்படும். கேள்விச் சபையின் முடிவே இறுதி முடிவாகும். கேள்வி திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் கேள்விதாரர் பிரசன்னமாகி இருக்கலாம்.

| இல | குத்தகை நிலையம் | கேள்வி வைப்பு பணம் (மீளளிக்கக்கூடியது) | கேள்வி படிவ கட்டணம் மீளளிக்க முடியாதது | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வி தொகை |
|---|---|---|---|---|
| | சேவைச்சந்தை -கிளிநொச்சி | | | |
| 1 | கிளிநொச்சி சந்தை தராசு கொட்டகை மரக்கறி | 147,000.00 | 1,000.00 | 7,371,000.00 |
| 2 | கிளிநொச்சி சந்தை தராசு கொட்டகை பழம், வெற்றிலை, பாக்கு | 70,000.00 | 1,000.00 | 3,547,000.00 |
| 3 | கிளிநொச்சி சந்தை துவிச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள் மற்றும் வாகனங்கள் .பாதுகாப்பு நிலையம் | 98,500.00 | 1,000.00 | 4,925,000.00 |
| 4 | கிளிநொச்சி சந்தை இல.1 கோழி இறைச்சிக்கடை | 80,000.00 | 1,000.00 | 4,022,600.00 |
| 5 | கிளிநொச்சி சந்தை இல.2 கோழி இறைச்சிக்கடை | 89,000.00 | 1,000.00 | 4,452,250.00 |
| 6 | கிளிநொச்சி சந்தை மாட்டிறைச்சிக்கடை | 125,000.00 | 1,000.00 | 6,270,000.00 |
| 7 | கிளிநொச்சி சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 30,000.00 | 1,000.00 | 1,530,000.00 |
| 8 | கிளிநொச்சி சேவைச்சந்தை பொதுமலசலகூடம் | 1,000.00 | 1,000.00 | 40,500.00 |
| | கிளிநகர்ப் பகுதி | | | |
| 1 | பரந்தன் சந்தியில் இருந்து இரணைமடுச் சந்தி வரையான A9 வீதி வாகன தரிப்பிடம் | 1,800.00 | 1,000.00 | 91,100.00 |
| 2 | கிளிநொச்சி பசுமைப்பூங்கா கலையகம் | 1,000.00 | 1,000.00 | 12,462.29 |
| | பொதுச்சந்தை – பரந்தன் | | | |
| 1 | பரந்தன் சந்தை தொகுதி | 1,400.00 | 1,000.00 | 72,000.00 |
| 2 | பொது மலசலகூடம் பரந்தன் | 1000.00 | 1,000.00 | 21,600.00 |
| | பொதுச்சந்தை- வட்டக்கச்சி | | | |
| 1 | வட்டக்கச்சி சந்தைதொகுதி | 4,000.00 | 1,000.00 | 210,500.00 |
| 2 | வட்டக்கச்சி கோழி இறைச்சிக்கடை | 9,000.00 | 1,000.00 | 470,000.00 |
| | பொதுச்சந்தை- இரணைமடு | | | |
| 1 | இரணைமடு சந்தை தொகுதி | 3,000.00 | 1,000.00 | 151,000.00 |
| | பொதுச்சந்தை- உருத்திரபுரம் | | | |
| 1 | D10உருத்திரபுரம் சந்தை தொகுதி | 1,000.00 | 1,000.00 | 10,999.00 |
| 2 | D8 உருத்திரபுரம் மாட்டிறைச்சிக்கடை | 4,000.00 | 1,000.00 | 200,000.00 |
| | பொதுச்சந்தை- ஸ்கந்தபுரம் | | | |
| 1 | ஸ்கந்தபுரம் சந்தை தொகுதி | 12,000.00 | 1,000.00 | 601,000.00 |
| 2 | ஸ்கந்தபுரம் கோழி இறைச்சிக்கடை | 8,000.00 | 1,000.00 | 411,000.00 |
| | பொதுச்சந்தை- தருமபுரம் | | | |
| 1 | தருமபுரம் மாட்டிறைச்சிக்கடை | 12,000.00 | 1,000.00 | 632,500.00 |
| | பொதுச்சந்தை- கல்லாறு | | | |
| 1 | கல்லாறு சந்தை தொகுதி | 1,000.00 | 1,000.00 | 11,700.00 |
| | பொதுச்சந்தை- ஜெயந்திநகர் | | | |
| 1 | ஜெயந்திநகர் மாட்டிறைச்சிக்கடை | 17,000.00 | 1,000.00 | 880,000.00 |
| | பொதுச்சந்தை- கண்டாவளை | | | |
| 1 | கண்டாவளை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 1,000.00 | 61,000.00 |
| | பொதுச்சந்தை- முரசுமோட்டை | | | |
| 1 | முரசுமோட்டை மாட்டிறைச்சிக்கடை | 3,900.00 | 1,000.00 | 199,100.00 |
| 2 | முரசுமோட்டை கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 1,000.00 | 21,192.61 |
| | பொதுச்சந்தை- புன்னைநீராவி | | | |
| 1 | புன்னைநீராவி மாட்டிறைச்சிக்கடை | 3,500.00 | 1,000.00 | 176,000.00 |
| 2 | புன்னைநீராவி கோழி இறைச்சிக்கடை | 5,000.00 | 1,000.00 | 253,000.00 |
| | மூன்று வருட கால குத்தகை (01.01.2026 - 31.12.2028) | | | |
| 1 | வன்னேரிக்குளம் சுற்றுலா மையம் | 1,500.00 | 1,000.00 | 79,440.00 |
| 2 | கனகாம்பிகைக்குளம் சிறுவர் பூங்கா | 1,000.00 | 1,000.00 | 39,720.00 |

**நிபந்தனைகள்**

1. உரியகாலத்தில் சமர்ப்பிக்கப்படாத கேள்விகள் எதுவித அறிவித்தலுமின்றி இரத்துச் செய்யப்படும்.
2. கடந்தகாலக் கேள்விகள் மூலம் சபைக்கு நிலுவைகளை செலுத்த தவறியவர்களும், கறுப்புப் பட்டியலில் உள்ளவர்களும் குத்தகை கேள்விகளில் பங்குபற்றத் தகுதியற்றவர்கள்.
3. கேள்வியை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்பதற்கோ, நிராகரிப்பதற்கோ கேள்விசபைக்கு அதிகாரமுண்டு.
4. கேள்விதாரர் இலங்கை பிரஜையாகவும் 18 வயதிற்கு மேற்பட்டவராகவும் கரைச்சிப் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவராகவும் இருத்தல் வேண்டும்.
5. கேள்விப் பத்திரம் பெற்றுக்கொள்ள வரும்போது தம் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் ஏற்றுக்கொள்ளத்தக்க ஆவணத்தின் நிழற்பிரதியை (தேசிய அடையாள அட்டை அல்லது சாரதி அனுமதி பத்திரம்) உண்மைப் பிரதி என சான்றுப்படுத்தி சமர்ப்பிப்பதுடன், கிராம சேவையாளரால் வழங்கப்பட்ட வதிவிடத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழையும் சபைக்கு சமர்ப்பிக்க வேண்டும்.
6. கேள்வி விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் போது சபையால் வழங்கப்பட்ட கேள்விப்பத்திரம். கடித உறை என்பவற்றை மட்டுமே பயன்படுத்த முடியும்.
7. கேள்வி விண்ணப்பங்களை விண்ணப்பதாரி அடையாள அட்டையுடன் நேரில் சமூகமளித்து பெற்றுக்கொள்ள வேண்டும்.
8. சித்தியடையும் கேள்விதாரர் கேள்வி தொகையின் மூன்றில் ஒரு பகுதி தொகையினை குறித்த காலத்திற்குள் (ஆகக்கூடியது ஒருவார காலத்தினுள்) செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்தல் வேண்டும்.
9. கேள்வி கோரலின் போது தெரிவு செய்யப்படும் முதலாவது விண்ணப்பதாரர் கேள்வி வைப்பு பணத்தினை செலுத்த தவறும் பட்சத்தில் இரண்டாவது மூன்றாவது விண்ணப்பதாரருக்கு அவர்களினால் கோரப்பட்ட கேள்வித்தொகைக்கு குத்தகையில் வழங்கப்படும். தவறும் பட்சத்தில் மீள் கேள்வி கோரப்படும்.
10. இறைச்சி கடைகள், சந்தைகள், குத்தகை நிலையங்கள் அனைத்தும் குத்தகைக்கு எடுப்பவராலேயே நடாத்தப்பட வேண்டும். குத்தகைகாரர் தவிர்ந்த வேறு ஒருவரால் குத்தகை நிலையம் நடாத்தப்படின் உடனடியாக ஒப்பந்தம் இரத்து செய்யப்படுவதுடன் வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
11. மாதாந்த குத்தகைக் கட்டணங்களை அம்மாத இறுதி வேலைநாட்களுக்குள் செலுத்துதல் வேண்டும். குறித்த கால எல்லைக்குள் செலுத்தத்தவறின் மாதாந்தக் கட்டுப்பணத்துடன் 10% தண்டப்பணத்தையும் சேர்த்து செலுத்தப்படல் வேண்டும்.
12. தொடர்ச்சியாக இரு மாதங்கள் குத்தகைகட்டணங்கள் செலுத்ததவறும் பட்சத்தில் எதுவித முன்னறிவித்தலுமின்றி குத்தகை நிலையம் சபையால் பொறுப்பேற்கப்படும்..
13. கொல்களத்தில் வெட்டப்பட்ட மாட்டிறைச்சியை, இறைச்சி கடையினை குத்தகைக்கு எடுத்தவர் தன்னால் குத்தகைக்கு பெற்றுக்கொண்ட குத்தகை நிலையத்துக்கு மட்டும் எடுத்துச்செல்ல முடியும். பிரதேச சபை எல்லைக்கு அப்பால் எக்காரணத்திற்காகவும் கொண்டு செல்ல அனுமதிக்கப்பட மாட்டாது.
14. துவிச்சக்கர வண்டி. மோட்டார் பாதுகாப்பு நிலையத்திற்கான கட்டணமாக துவிச்சக்கர வண்டிக்கு ரூபா 10.00 உம், மோட்டார் சைக்கிளுக்கு ரூபா.20.00 உம், முச்சக்கர வண்டி, கயஸ் போன்ற சிறியரக வாகனங்களுக்கு.ரூபா 30.00 உம், கனரக வாகனங்களுக்கு ரூபா 50.00 உம். மட்டுமே அறவிடமுடியும்.
15. அனைத்து தராசுக்கொட்டகைக்குமான வரி அறவீட்டினை மேற்கொள்ளும் போது 4% தூக்கு வரியாக அறவிட முடியும். வரி வீதங்களின் அதிகரிப்பையோ குறைப்பையோ சபையின் அனுமதியின்றி மேற்கொள்ள முடியாது.
16. கிளிநகர்ப்பகுதி வாகன தரிப்பிட கட்டண அறவீடு. ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகள் அனைத்தும் "2016.02.02ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிப் பத்திரிகையின் (அதி விஷேசமானது) பகுதி 2- பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் வாகனங்களை நிறுத்துதலை முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல், கட்டுப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல்" தொடர்பான 1 தொடக்கம் 36 வரையான நியமத்துணை விதிகளுக்கு கட்டுப்படும்.
17. ஆரம்பகேள்வி தொகையைவிட குறைவான கேள்வி கோருபவர்களது விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் கேள்விவைப்புப்பணமும் மீளளிக்கப்பட மாட்டாது என்பதுடன் அவர்களது பெயர்கள் கறுப்புப்பட்டியலில் சேர்க்கப்படும்.
18. சபையால் கட்டப்பட்ட கடைகள் காணப்படாதவிடத்து சபையால் கடைகட்டப்படும்வரை தற்காலிக கடை குத்தகைதாரராலேயே கட்டப்பட வேண்டும். இதற்கான செலவீனங்களை சபை பொறுப்பேற்காது என்பதுடன் சபையால் கடை கட்டிவழங்கப்படவில்லை என்றகாரணத்தை முன்வைத்து மாதாந்த கட்டணத்தில் விலக்களிப்போ, குறைப்பனவோ வழங்கப்படமாட்டாது.
19. இறைச்சிகடைக்குரிய மாதாந்த இடவாடகை கட்டணமாக ரூபா 1500.00 இனை ஒவ்வொரு மாதமும் சபைக்கு செலுத்த வேண்டும்.
20. இங்கு குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக சபையினால் காலத்துக்குகாலம் விதிக்கப்படும் எழுத்து மூல நிபந்தனைகளையும் குத்தகைதாரர் கடைப்பிடிக்க வேண்டும்.
21. மாட்டிறைச்சி கடைகளை குத்தகைக்கு வழங்குவது தொடர்பாக அரசினால் எதிர்காலத்தில் வெளியிடப்படும் வர்த்தமானிகள், சுற்றுநிருபங்களுக்கு அமைய சபையினால் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும்.
22. இந் நிபந்தனைகள் தொடர்பாக சபையின் எந்தவித முடிவையும் ஏற்பதுடன் இது தொடர்பில் சபைக்கெதிராக நீதிமன்றநடவடிக்கை எதனையும் மேற்கொள்ளமுடியாது.

27.10.2025 (C-4192)

தவிசாளர்,
கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## அமெரிக்க ஜனாதிபதி மலேசியா விஜயம்



(கோலாலம்பூர்)
அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நேற்று ஞாயிற்றுக்கிழமை உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு மலேசியாவுக்கு சென்றுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் 5 நாட்கள் பயணமாக ஆசிய நாடுகளுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார். இது அவருடைய முதல் ஆசிய நாடுகள் பயணமாகும்.

மலேசியாவில் நடைபெறும் ஆசியான் உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக அவர் தலைநகர் கோலாலம்பூரை சென்றடைந்துள்ளார்.

அவருக்கு மலேசியா அரசு தரப்பில் சிவப்பு கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து ஆசியான் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளார்.

முன்னதாக கம்போடியா-தாய்லாந்து இடையேயான எல்லை பிரச்சினையைமுடிவுக்குகொண்டு வருவதற்காக அமைதி ஒப்பந்தத்தில் ட்ரம்ப் கையெழுத்திடவுள்ளார்.


பின்னர் அங்கிருந்து ஜப்பானுக்கு செல்லவுள்ளார். அங்கு புதிய பிரதமர் சனே தகச்சியுடன் பேச்சுவார்த்தை நடத்துவதுடன் தென் கொரியாவில் நடைபெற உள்ள ஆசியா பசிபிக் பிராந்திய பொருளாதார கூட்டமைப்பு மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளார்.

அப்போது சீன ஜனாதிபதி ஜின்பிங்கை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துகிறார். இந்தநிலையில் வட கொரிய ஜனாதிபதியுடனான சந்திப்பு குறித்து ஊடகவியலார்கள் கேள்விக்கு ட்ரம்ப், "கிம் ஜாங் உன் எனக்கு நல்ல நண்பர். அவரை சந்திக்க மிகவும் ஆவலாக உள்ளேன். வாய்ப்பிருந்தால் பார்க்கலாம்" எனத் தெரிவித்தார்.

இருப்பினும் பயணத் திட்டத்தில் கிம் ஜாங் உன்னுடனான எந்த சந்திப்புக்கும் திட்டமிடப்படவில்லை என வெள்ளை மாளிகை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## ரஷ்ய ஜனாதி

## நேரத்தை வீண



(வோஷி
ரஷ்ய ஜ
டிமிர் பு
நேரத்தை
விரும்ப
அமெரி
ட்ரம்ப் தெ

உக்ரைன், ரஷ்யா நாடுகளின் போர் முற்று பெறுவதாக தெரியவில்லை. போரை முடிவுக்குக் கொண்டு வர எதிர்ப்பதாக ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ் தெரிவித்து இருந்தார்.

நேற்று இரவும் கூட உக்ரைன் மீது ரஷ்ய ஏவுகணைகளை வீசி கடும் தாக்குதல் நடத்தியது. இதில் 4 பேர் கொல்லப்பட்டனர், 20 பேர் படுகாயம் அடைந்தனர். போரை நிறுத்த அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் மேற்கொண்ட முயற்சிகள் எதுவும்

பலன
இ
பேசி
வீண
என்
தெரி
த்து
வது.

## அமெரிக்க அரசியலில் மீண்டும் கமலா அலை

### ட்ரம்ப் மீது கடும் விமர்சனம்



(வோஷிங்டன்)
கடந்த ஆண்டு நடந்த அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் குடியரசுக் கட்சி சார்பில் ட்ரம்பும், ஜனநாயகக் கட்சி சார்பில் துணை ஜனாதிபதியாக இருந்தவரும், இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவருமான கமலா ஹாரிஸும் போட்டியிட்டனர்.

இதில் ட்ரம்ப் வெற்றி பெற்று ஜனாதிபதியாக பதவியேற்றார்.

இந்நிலையில், அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் மீண்டும் போட்டியிடத் திட்டமிட்டுள்ளதாக கமலா ஹாரிஸ் கூறியுள்ளார்.

எதிர்காலத்தில் வெள்ளை மாளிகையில் ஒரு பெண் ஜனாதிபதி நிச்சயம் இருப்பார். அது நானாகக் கூட இருக்கலாம் என கமலா ஹாரிஸ் சமீபத்தில் நேர்காணல் ஒன்றில் தெரிவித்துள்ளார்.

மேலும், ஒரு பாசிசவாதியாகவும், சர்வாதிகாரியாகவும் டொனால்ட் ட்ரம்ப் அரசாங்கத்தை வழி நடத்துவர் என்ற எனது கணிப்புகள் உண்மையாகி விட்டன எனவும், கமலா ஹாரிஸ் குறிப்பிட்டுள்ளார். (நி)

## கொலம்பிய ஜனாதிபதி மீது பொருளாதாரத் தடை ட்ரம்ப் நிர்வாகம் அதிரடி நடவடிக்கை

(வோஷிங்டன்)
உலகளவில் போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டதாகக் கூறி, கொலம்பிய ஜனாதிபதி குஸ்டாவோ பெட்ரோ மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்கள் மீது அமெரிக்கா பொருளாதார தடை விதித்துள்ளது.

தென் அமெரிக்க நாடுகளான கொலம்பியா, வெனிசுலாவில் இருந்து அமெரிக்காவிற்குள் போதைப் பொருட்கள் கடத்தப்படுவதாக, ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தொடர்ந்து குற்றம் சாட்டி வருகிறார்.

விமர்சனம் போதைப் பொருள் கும்பலை தடுக்கும் நடவடிக்கை என்று கூறி, கரீபியன் மற்றும் பசிபிக் பெருங்கடல் பகுதிகளில் எட்டு கப்பல்களையும் அமெரிக்க இராணுவம் தகர்த்துள்ளது. மேலும் கொலம்பியா ஜனாதிபதி குஸ்டாவோ பெட்ரோ சட்ட விரோத போதைப்பொருள் வியாபாரி என ட்ரம்ப் கடுமையாக விமர்சித்து வருகிறார்.

கொலம்பிய நாட்டு வயல்களில் போதைப் பொருட்களின் உற்பத்தியை ஊக்குவித்து வருவதாகவும் குற்றம் சாட்டினார்.

அமெரிக்காவில் இருந்து பெரிய அளவிலான உதவிகள் மற்றும் மானியங்கள் கிடைத்தும், பெட்ரோ அதைத் தடுக்க எதுவும் செய்யவில்லை என்று கூறி, அந்நாட்டிற்கான உதவிகளையும் குறைத்தார்.

மேலும், போதைப்பொருள் உற்பத்தி மற்றும் கடத்தல் நாடுகள் பட்டியலில் 30 ஆண்டுகளுக்குப் பின், முதல் முறையாக கொலம்பியாவையும் சேர்த்தார் ட்ரம்ப்.

இந்நிலையில் தீவிர போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கை என்று கூறி, கொலம்பிய ஜனாதிபதி பெட்ரோ, மனைவி, மகன் மற்றும் அந்நாட்டு உள்துறை அமைச்சர் ஆகிய நான்கு பேர் மீது, அமெரிக்கா பொருளாதாரத் தடை விதித்துள்ளது.

அவர்கள் உலகளவில் போதைப்பொருள் வணிகத்தில் ஈடுபட்டதாக அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது. (நி)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# திபதி புடினுடன் பேசி

# னடிக்க விரும்பவில்லை!

(வாஷிங்டன்) ...........
ஷ்ய ஜனாதிபதி விளா
ிர் புடினுடன் பேசி என்
த்தை நான் வீணாக்க
நம்பவில்லை என்று
மெரிக்க ஜனாதிபதி
ம்ப் தெரிவித்தார்.




பலனளிக்கவில்லை.

இந் நிலையில் புடினுடன் பேசி என் நேரத்தை நான் வீணாக்க விரும்பவில்லை என்று ட்ரம்ப் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் கூறியதாவது,அமைதி ஒப்பந்தம் ஏற்படும் என்ற எண்ணம் புடினுக்கு இருக்க வேண்டும். அப்படி இல்லாத பட்சத்தில் அவருடன் பேசி என் நேரத்தை வீணாக்க விரும்பவில்லை. அவருடன் (புடின்) என்றுமே மிக சிறந்த உறவு உண்டு. ஆனால் இப்போது மிகவும் ஏமாற்றம் அளிக்கிறது என ட்ரம்ப் தெரிவித்தார்.

முன்னதாக, புடாபெஸ்டில் புடினை,ட்ரம்ப் சந்திப்பார். போர் நிறுத்தம் பற்றி மத்தியஸ்த பேச்சுவார்த்தை நடத்துவார் என்று அறிவிக்கப்பட்டது, குறிப்பிடத்தக்கது. (நி)

# ஐரோப்பாவில் மீண்டும் பறவைக் காய்ச்சல் தீவிரம்



ஐரோப்பாவில் பறவைக் காய்ச்சல் மீண்டும் வேகமாகப் பரவி வருவது அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த பத்தாண்டுகளில் இதுபோன்று அதிகமான நாடுகள் தொடக்கத்திலேயே, பாதிப்பு பதிவுசெய்தது இதுவே முதல்முறை என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இடம்பெயரும் காட்டுப் பறவைகள் மூலம் பரவும் இந்த நோய், ஒகஸ்ட் முதல் ஒக்டோபர் நடுப் பகுதி வரை பிரித்தானியா மற்றும் 10 ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் மொத்தம் 56 பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது. இதில் பெரும்பாலானவை போலந்தில் பதிவாகியுள்ளன.

2022 ஆம் ஆண்டில் ஐரோப்பா முழுவதும் மிக மோசமான நிலையை எதிர்கொண்டது. அப்போது மொத்தம் 9 நாடுகளில் 31 பாதிப்புகள் பதிவாகியிருந்தன.

ஆனால், தற்போது 10 நாடுகளில் தொடக்கத்திலேயே பரவல் பதிவாகியுள்ள நிலையில், மொத்த எண்ணிக்கை 2022 உடன் ஒப்பிடுகையில் குறைவாகவே உள்ளது.

இந்த வாரம் பெல்ஜியம் மற்றும் ஸ்லோவாக்கியா ஆகிய நாடுகளில் பறவைக் காய்ச்சல் புதியதாக கண்டறியப்பட்டுள்ளது.

அதேபோல்பிரான்ஸில் மேலும் இரண்டு சம்பவங்கள் வெளிப்பட்டுள்ளன.

ஸ்பெயின் மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகளிலும் பாதிப்பு எண்ணிக்கை அதிகரித்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

உலக சுகாதார அமைப்பு வெளியிட்ட அறிக்கையின்படி, மனிதர்களுக்கு பறவைக் காய்ச்சல் பரவுவதற்கான அபாயம் குறைவாகவே உள்ளது. பாதிக்கப்பட்ட விலங்குகளுடன் நேரடி தொடர்பு கொண்ட சிலருக்கே இது வரை தொற்று ஏற்பட்டுள்ளதாககூறப்பட்டுள்ளது.

பிரான்ஸ், பண்ணை வாத்துகளுக்கான மூன்றாவது வருடாந்திர தடுப்பூசி திட்டத்தை தொடங்கியுள்ளது. இதேவேளை, அமெரிக்கா மற்றும் ஆசியா நாடுகளிலும் பறவைக் காய்ச்சல் தாக்கம் அதிகரித்து வருகிறது.

அமெரிக்காவில் இது வரை 180 மில்லியனுக்கும் மேற்பட்ட பறவைகள் கொல்லப்பட்டுள்ளன.

இதன் விளைவாக முட்டை விலையில் உயர்வு ஏற்பட்டதுடன், சில கறவை மாடுகள் மற்றும் மனிதர்களிலும் பாதிப்பு பதிவாகியுள்ளது.

உலகின் மிகப்பெரிய கோழி இறைச்சி ஏற்றுமதியாளரான பிரேசில், கடந்த காலங்களில் பறவைக் காய்ச்சலால் கடுமையாக பாதிக்கப்பட்டிருந்தாலும், தற்போது பறவைக். காய்ச்சல் இல்லாத நாடு என அறிவிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

# தடை
# கை

ர், முதல்
ியாவை

தீவிர
ிப்பு நட
், கொல
பட்ரோ,
றும் அந்
மைச்சர்
து, அமெ
த் தடை

களவில்
வணிக
மெரிக்கா
(நி)



# வீதியை ஆக்கிரமித்த சிவப்பு நண்டுகளால்

## அவுஸ்திரேலியாவில் விநோதம்



(கன்பெரா)

அவுஸ்திரேலியாவின் கிறிஸ்மஸ் தீவு தேசியப் பூங்காவில் வசிக்கும் இலட்சக்கணக்கான சிவப்பு நண்டுகள் தங்களின் வருடாந்திர இனப் பெருக்கப் பயணத்தின் காரணமாக வீதிகளை ஆக்கிரமித்துள்ளதால், அப்பகுதியில் போக்குவரத்து தடை செய்யப் பட்டுள்ளது.

இது ஒவ்வொரு ஆண்டும் ஒக்டோபர்-நவம்பர் மாதங்களில் நடக்கும் ஒரு வினோதமான இயற்கை நிகழ்வாகும்.

இந்தச் சிவப்பு நண்டுகள் கிறிஸ்மஸ் தீவின் காட்டுப் பகுதிகளில் சிறிய குழிகளை அமைத்து வாழ்கின்றன.

ஒவ்வொரு ஆண்டும் ஒக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில், இனப்பெருக்கப் பருவம் வரும்போது, இலட்சக்கணக்கான ஆண் மற்றும் பெண் நண்டுகள் காட்டில் இருந்து வெளியேறி, கடற்கரையை நோக்கிப் படையெடுக்கின்றன.

கடற்கரையில் ஆண் நண்டுகள் குழிகளை அமைக்க, பெண் நண்டுகள் அவற்றில் முட்டைகளை இட்டு சுமார் இரண்டு வாரங்கள் அடைகாக்கின்றன.

நவம்பர் மாதத்தின் மத்தியில், முட்டைகளில் இருந்து வெளிவரும் குட்டி நண்டுகள் கடலுக்குள் செல்கின்றன.

இவை கடல் அலைகளில் சுமார் ஒரு மாத காலம் தாக்குப்பிடித்த பிறகு, இளம் நண்டுகளாக மீண்டும் கிறிஸ்மஸ் தீவிற்குத் திரும்புகின்றன.

தற்போது இனப் பெருக்கப் பயணத்தை மேற்கொண்டுள்ள நண்டுகள், தீவின் வீதிகளை முழுவதுமாக ஆக்கிரமித்துள்ளதால், அந்த வழிகளில் மனிதப் போக்குவரத்து முற்றிலுமாகத் தடை செய்யப்பட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாடளாவிய ரீதியில் விசேட சுற்றிவளைப்பு

### 28,000 இற்கும் மேற்பட்டோர் சோதனை

(கொழும்பு)

குற்றம் மற்றும் போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பில் நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கை மூலம் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதன்படி, நேற்று முன்தினம் சனிக்கிழமை 27,890 பேர் பொலிஸாரினால் சோதனைக்குட்படுத்தப்பட்டதோடு, சந்தேகத்தின் பேரில் 743 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, குற்றங்களுடன் தொடர்புடைய மற்றும் நேரடியாக 16 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மேலும், கைது செய்ய பிறப்பிக்கப்பட்ட பிடியாணைகளுக்கமைய 253 பேரும், திறந்த பிடியாணைகளுக்கமைய 170 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதேநேரம், மதுபோதையில் வாகனம் செலுத்திய 15 பேரும், கவனக்குறைவாக வாகனம் செலுத்திய 13 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், பிற போக்குவரத்து குற்றங்கள் தொடர்பாக 3, 944பேர் நேற்று முன்தினம் பொலிஸாரின் விசேட சோதனையின்போது கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## சாவகச்சேரி பிரதேசசபைக்கு புல்வெட்டும் இயந்திரங்கள்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபையின் உப தவிசாளர் இராமநாதன் யோகேஸ்வரனின் வேண்டுகோளுக்கு இணங்க நாவற்குழி பிரதேசத்தில் இயங்கி வரும் ANNAI HOLDINGS PRIVATE LTD ன் உரிமையாளரால் பிரதேச சபைக்கு 3 புல் வெட்டும் இயந்திரங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. (8-30)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 7 இல் சூரி செவ்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: Diploma,Graphic Designer<br>எதிர்பார்ப்பு: அரச/தனியார் உத்தியோகம்<br>தொ.இ: B/16181 | பிறப்பு: 1998 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 8 இல் சூரி செவ்<br>கி.பா: 26 1/2<br>உயரம்: 5' 4"<br>தகைமை/தொழில்: BA<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி, உத்தியோகம்<br>தொ.இ: G/16183 |
| பிறப்பு:1992 இந்து<br>நட்சத்திரம்: மகம் 12 இல் செவ்<br>கி.பா: 34<br>உயரம்:5' 8"<br>தகைமை/தொழில்: A/L, நகைத்தொழில்<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/16182 | பிறப்பு:1993 இந்து<br>நட்சத்திரம்:உத்தராடம்<br>உயரம்: 5' 4" 1 இல் செவ்<br>தகைமை/தொழில்:Engineer(France)<br>எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்<br>தொ.இ: G/16184 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 8 இல் செவ்<br>உயரம்:5' 5"<br>தகைமை/தொழில்: Diploma, Restaurant(own) (France)<br>எதிர்பார்ப்பு:விவாகரத்தானவர்கள்<br>தொ.இ: B/16185 | பிறப்பு: 1998 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 0 7 இல் செவ்<br>உயரம்: 5' 6"<br>தகைமை/தொழில்: IELTS,தாதி(pvt)<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: G/16186 |
| பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் 9 இல் சூரி செவ்<br>கி.பா: 32 1/2<br>உயரம்:5' 6"<br>தகைமை/தொழில்-NVQ-4,Office Employee Service<br>எதிர்பார்ப்பு: அரச/தனியார் உத்தியோகம்<br>தொ.இ: B/16187 | பிறப்பு: 2005 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 7 இல் செவ்<br>கி.பா: 56<br>உயரம்: 5' 2"<br>தகைமை/தொழில்:COLLEGE<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: G/16188 |
| பிறப்பு: 1997 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 37<br>உயரம்:5' 7"<br>தகைமை/தொழில்: BSC, Software Engineer<br>எதிர்பார்ப்பு: அரச/தனியார் உத்தியோகம்<br>தொ.இ: B/16190 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 71<br>உயரம்: 5' 2"<br>தகைமை/தொழில்: BA, DO<br>எதிர்பார்ப்பு: Degree and Employee<br>தொ.இ: G/16189 |

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 470



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## மூளை வளர்ச்சி

எனக்குத் தெரிந்த ஒருத்தர் இருக்கிறார்.

அவர் எப்ப பார்த்தாலும் வெண்டைக்காயை வீட்டுக்கு அதிகமாக வாங்கிக்கொண்டு போவார்.

"வெண்டைக்காய் என்றால் உங்களுக்கு அவ்வளவு விருப்பமா? என்று கேட்டேன்.

அப்படி இல்லை..! என் மகள் கணக்கிலே ரொம்ப வீக்!

அதுதான் வெண்டைக்காயைச் சாப்பிடக் கொடுத்து அவள் மூளையை விருத்தி செய்ய முடியுமா? என்று பார்க்கிறேன்!என்றார்.

அதன்பின் தான் எனக்கும் அப்படி ஒரு யோசனை தோன்றியது.

நான் கூட கொஞ்ச நாளைக்கு வெண்டைக்காய் சாப்பிட்டுப் பார்க்கலாமா? என்று.

சரி.. அதுக்கு முன்னால் ஒரு வைத்தியரிடம் யோசனை கேட்கலாம் என்று நினைத்தேன். கேட்டேன்.

வைத்தியர் என்ன சொல்கின்றார் தெரியுமா?

ஒருத்தர் புத்திசாலியாக ஆகிறதுக்கும் வெண்டைக்காய் சாப்பிடுவதற்கும் சம்பந்தம் இல்லை என்றார்!

நாம் சாப்பிடுகிற உணவு வகை எதுவுமே நமது மூளையை "இன்ஃப்ளுயன்ஸ்" செய்ய முடியாதாம்!

ஆனால் ஒன்று!

சத்து இல்லாத உணவு வகைகளை குழந்தைகளோ கருவுற்ற தாய்மார்களோ சாப்பிட்டால் அது நிச்சயம் மூளை வளர்ச்சியை பாதிக்குமாம்.

அப்படி சாப்பிட்டதனாலேதான். அதோட விளைவுதான் இன்றைக்கு இந்தியாவிலே இருக்கிற மூளை வளர்ச்சி குன்றிய மூன்று இலட்சம் குழந்தைகள்.

ஒரு குழந்தையின் முதல் 18 மாதம் ரொம்ப முக்கியம். அந்த காலத்துக்குள்ளே சத்துணவை தொடர்ந்து கொடுத்துக்கொண்டு வந்தால் போதும், மூளை வளர்ச்சி குன்றுவதை நாம் முழுவதும் தடுத்துவிடலாம்.

மற்றப்படி வயதானதன்பின் வெண்டைக்காய் சாப்பிடுகிறேன் என்பதெல்லாம் சும்மா!

இதேமாதிரி வெளிநாடுகளிலே ஒரு நம்பிக்கை உண்டாம்.

அதாவது, குரங்கு மூளையை சாப்பிட்டால் நம் மூளை விருத்தியாகும் என்று ஒரு நம்பிக்கை.

இதற்கும் விஞ்ஞான பூர்வமாக ஆதாரம் எதுவும் கிடையாதாம்.

அதே மாதிரி "பெண்புத்தி பின்புத்தி என்று சொல்றார்களே அதுவும் சும்மா கட்டுக்கதை.

சிலபேருக்கு தலைபெரிதாக இருக்கும். ரெட்டை மண்டை!

இப்படி உள்ளவர்களுக்கு தலைக்குள்ளே மூளை அதிகமாக இருக்கும்.. புத்திசாலியாக இருப்பார்கள் என்று சில பேர் நினைக்கிறது உண்டு. அதுவும் சும்மா கதை. அதில் உண்மை கிடையாது.

மூளையைப் பற்றி இப்போதெல்லாம் நிறைய ஆராய்ச்சி நடக்குது. 1990லேயிருந்து 2000 வரைக்கும் உள்ள பத்து ஆண்டுகள். இதை உலக நாடுகள் Decade of brain என்று அறிவித்திருக்கிறது.

மூளையை நன்றாக வைத்திருப்பதற்கு யோகாப் பயிற்சியெல்லாம் ரொம்ப உபயோகமாக இருக்குமாம்.

ஒருத்தருக்கு மூளை சரியில்லை என்று வைத்துக்கொள்வோம். இன்னொருத்தருக்கு மூளையை எடுத்து அவருக்கு வைக்கலாமா? சிறுநீரகம் அறுவை சிகிச்சை எல்லாம் நடக்கிறது. ஒருத்தர் இருதயத்தைக் கூட எடுத்து இன்னொருவருக்கு வைத்து பொருத்தினார்கள். அது மாதிரி மூளை மாற்று அறுவை சிகிச்சை செய்ய முடியுமா?

இதுக்கு நிபுணர்கள் என்ன சொல்றார்கள் என்றால் மூளையை மாற்றி வைத்துவிடலாம். ஆனால் அந்த நரம்புகளை தூண்டிவிட்டு stimulate செய்து அதை எப்படி வேலை செய்ய வைப்பது என்ற வித்தையை இன்னமும் மனிதன் கண்டுபிடிக்கவில்லையாம். ஆனால் அது சம்பந்தமாக ஆராய்ச்சிகள் மும்முரமாக நடந்துகொண்டுதான் இருக்காம்.

ஆனால் ஒரு காரியம் மட்டும் இப்போ நடக்குது.

ஒரு மூளையிலேயிருந்து சில திசுக்களை எடுக்கறது. அந்தத் திசுக்களை இன்னொரு மூளையிலே செலுத்துவது. அந்த நரம்புகளைத் தூண்டிவிட்டு வேலை செய்ய வைக்கிறது. இப்படிப்பட்ட முயற்சிகள் நடக்குது!

மனித மூளை எவ்வளவோ உண்மைகளைக் கண்டுபிடிச்சிருக்கு. இருந்தாலும் தன்னைப்பற்றிய உண்மைகளை இன்னும் முழுசா கண்டுபிடிக்கவில்லை!

மூளையை Internal Universe என்கிறார்கள்

உள்ளுக்குள் இருக்கும் ஒரு பிரபஞ்சம்.

மூளை இருந்தும் அதை சரிவர உபயோகப்படுத்தாதவர்கள் தான் எங்களில் அதிகம்.

ஒரு மாநகரப் பேருந்திலே ஒருத்தன் ஏறினான். ஒரு டிக்கெட் தானே வாங்கணும்! ரெண்டு டிக்கெட் வாங்கினான்.

ஒருத்தர் தானே ஏறியிருக்கின்றீர்கள். எதுக்கு ரெண்டு டிக்கெட் வாங்கணும் என்று கேட்டிருக்கிறார் பக்கத்துலே இருந்தவர்.

"நான் எதுலேயும் கொஞ்சம் எச்சரிக்கையாக நடந்துக்கிறவன்" ஒன்று தொலைந்து போனால் இன்னொன்று உதவுமேயென்பதற்காக இரண்டு வாங்கினேன்!" என்றான் இவன்.

"சரி. அந்த இன்னொன்றும் தொலைந்து போனால் என்ன செய்வாய் என்று கேட்டிருக்கார் அவர்.

அதனாலே என்ன. அதுதான் ஏற்கனவே வாங்கின "மாதந்திர டிக்கெட்" என் பரிசிலே இருக்கே! என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## பனீர் / பாலாடைக்கட்டி



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

சைவ உணவில் பனீர் இன்றியமையாத ஆரோக்கியமான மருத்துவகுணங்கள் நிறைந்த ஒன்றாகும். பாலாடைக்கட்டி என்றும் அழைக்கப்படும். மோரில் இருந்து தயிரைப் பிரித்து, அதை அழுத்தி ஒரு திடமான பாலாடைக்கட்டியை உரு வாக்குவதன் மூலம் இது தயாரிக்கப்படுகிறது. பனீர் புரதம், விற்றமின்கள் மற்றும் தாதுக்களின் சிறந்த மூலமாகும். குறிப்பாக சைவ உணவு உண்பவர்களுக்கு பனீர் புரதத்தின் நல்ல மூலமாகும். உடலின் சரியான செயற்பாட்டிற்கு தேவையான ஒன்பது அத்தியாவசிய அமினோ அமிலங்கள் இதில் உள்ளன. மற்றைய பாலாடைக்கட்டிகளுடன் ஒப்பிடும் போது இது ஒரு ஆரோக்கியமான விருப்பம் மற்றும் தொடர்ந்து உட்கொள்ளலாம். பனீர் சாப்பிடும் போது அதிகபுரதச் சத்து கிடைப்பது மட்டுமல்லாமல் நீண்ட நேரத்திற்கு பசி உணர்வை ஏற்படுத்த மாட்டாது. எனவே மேலதிகமாக உணவு உட்கொள்வதைத் தடுத்து உடல் எடையையும் குறைக்க உதவும். சைவ உணவு உண்பர்களுக்கு பனீர் ஓர் அற்புதமான புரத உணவாகும். தசைவளர்ச்சி மற்றும் பழுதுபார்க்க தேவையான உயர்தர புரதம் பனீரில் உள்ளது. உடற்கட்டமைப்பாளர் மற்றும் விளையாட்டு வீரர்களுக்கு இது விருப்பமான ஆரோக்கியமான உணவாகும். பனீரில் இன்சுலின் உற்பத்திக்கு உதவும். டிரிப்டோபான் என்ற அமினோ அமிலம் உள்ளது. இரத்தத்தில் சீனியின் அளவு திடீரென அதிகரிப்பதைத் தடுக்கவும் இது உதவுகிறது. நல்ல என்பு மற்றும் பற்களின் ஆரோக்கியத்திற்கும் பராமரிப்பிற்கும் தேவையான கல்சியம் மற்றும் பொஸ்பரசின் வளமான மூலமாக பனீர் உள்ளது. பனீரில் அதிகளவு நாகச்சத்து உள்ளது. இது நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க உதவுகிறது. சளி, காய்ச்சல் மற்றும் தொற்று போன்ற பொதுவான நோய்களின் அபாயத்தை குறைக்க உதவுகிறது. பனீரில் புரதம் நிறைந்துள்ளது. இது உங்களுக்கு உடல் நிலை சரியில்லாமல் இருந்தால் ஆற்றல் அளவை அதிகரிக்க உதவும். பனீர் விற்றமின் B12 நிறைந்ததாகும். விற்றமின் B12 நல்ல மூளை ஆரோக்கியத்திற்கு அவசியம் என நிரூபிக்கப்பட்டுள்ளது. இது நரம்பு மண்டலத்தின் சரியான செயற்பாட்டை பராமரிக்க உதவுகிறது. சைவ உணவு உண்பவர்களுக்கு விற்றமின் B12 குறைபாடு மிகவும்பொதுவானது. இது சைவ உணவு உண்பவர்களின் தினசரி உணவில் பனீரை ஒரு சிறந்த கூடுதலாக்குகிறது.



பனீரானது நரம்பியற்கடத்தியான செரோடோனின் உற்பத்திக்கு உதவும். டிரிப்டோபனின் வளமான மூலமாக பனீர் உள்ளது. செரோடோனின் மன நிலையை ஒழுங்குபடுத்துதல், மன அழுத்தம் மற்றும், பதற்றம் ஆகியவற்றை குறைப் பதன் மூலம் மன ஆரோக்கி யத்தை மேம் படுத்த உதவுகிறது. இதனையே சித்தர்கள் மனம்ஒருநிலைப்பட மன ஆரோக்கியத்திற்கு சாத்வீகமான உண்வுகளை பயன்படுத்த வேண்டு மென வலியுறுத்தியுள்ளார்கள். பனீரில் உள்ள கொழுப்புக்கள் எளிதில் நமது உடலால் செரிமானம் செய்யப்ப டுகின்றது. எனவே நமது உடலில் இருந்து நல்ல ஆற்றல் வெளிப்படவும் உதவுகிறது. பனீரில் இருக்கும் மகனீ சியம் சத்தானது ஒரு நல்ல மலமிளக்கியாக உள்ளதால் மலச்சிக்கல் பிரச்சினை ஏற்படாமல் இருக்க இது உதவுகிறது. பொஸ்பரஸ் சத்தானது செரிமானம் செயல்முறையில் நமக்கு உதவுகிறது. பொதுவாக பனீர் சுவாச நோய்கள் போன்ற பல நோய்களில் இருந்து நம்மை பாதுக்கிறது. மூச்சுக் குழாய் அழற்சி போன்ற நோய்களை பனீர் தொடர்ந்து சாப்பிடுவதன் மூலம் குணப்படுத்த முடியும். இது ஈமோகுளோபின் அதிகரிப்பிற்கு உதவுவதால் உடலின் ஈமோகுளோபின் உற்பத்தியை துாண்ட உதவுகிறது. பனீரில் காணப்படும் விற்றமின் B சத்துக்கள் குழந்தைகட்டு சிறந்த வளர்ச்சியை ஊக்குவிக்க உதவுகிறது. அத்துடன் வளரும் சிறார்களின் செறிவு மற்றும் நினைவாற்றலை மேம் படுத்த உதவுகிறது. பனீரில் உள்ள பொட்டாசியம் சத்தும் இரத்த இழுத்தத்தை ஒழுங்குபடுத்தி இதய நோய்களைத் தடுக்கவும் பக்கவாதம் போன்ற பிரச்சினைகளைத் தடுக்கவும் உதவுகிறது.

பனீரில் பல சுகாதார நன்மைகள் நிறைந்துள்ளதால் இது வயதிற்கு ஏற்ப ஒவ்வொருவரின் உணவில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டியது அவசியம். பனீருடன் நிறையக் காய்கறிகளை சேர்த்து உண்ண வேண்டும். ஏனெனில் பெரியவர்களில் குழந்தைகளை விட வளர்சிதை மாற்ற விகிதம் என்பது மிகவும் குறைவாக உள்ளது. மேலும் பனீர் காய்கறிகளுடன் சேர்ந்து உட்கொள்ளப்படும்போது செரிமானம் மேலும் எளிதாகிறது. பனீர் புரதம், கல்சியம், விற்றமின் D சத்துக்கள் நிறைந்துள்ளதால் கர்ப்பிணிப் பெண்களுக்கும் உகந்தது. அத்துடன் பெண்களுக்கு மார்பக புற்றுநோய் அபாயத்தை குறைக்கக் கூடியதுமாகும். அத்துடன் ஒமேகா 3 மற்றும் ஓமேகா-6 கொழுப்பு அமிலங்களும் மூட்டுவலியை எதிர்த்துப் போராடும் ஆற்றலும் உள்ளவை. இக்கொழுப்பு அமிலங்கள் பனீரில் காணப்படுவது சிறப்பமாகும். ஆனால் அளவாக உட்கொள்ளும் போது இவ் வளவு பலன்களையும் கொடுக்கும். ஏனெனில் அளவிற்கு அதிகமான பனீரை சாப்பிடும் போது புரதமானது நீண்டநேரம் குடலில் தங்கியிருப்பதால் சில உபாதைகளான குமட்டல், வயிற்றுவலி மற்றும் பிடிப்புக்கள் போன்றவற்றை சில வேளைகளில் ஏற்படுத்தலாம். எனவே அளவாக எடுத்தல் சிறப்பாகும்.

## இராசிபலன்

27.10.2025
ஐப்பசி 10, திங்கட்கிழமை
சஷ்டி பின்னிரவு 4.33 மணி வரை

மூலம் முற்பகல் 11.23 மணிவரை
சுப நேரம் 12.03-1.33 மணிவரை
இராகுகாலம் 7.33-9.03 மணிவ்ரை
கந்தசஷ்டி விரத நிறைவு, சூரசம்காரம்

சந்திராஷ்டமம்
ரோகிணி, மிருகசீரிடம்

வளவன்

**மேஷம்** வீட்டை அழகாக வைத்திருக்கும் எண்ணம் உருவாகும், ஆன்றோர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், அச்சுறுத்தல்கள் அகன்று ஆனந்தம் கூடும் நாள்.

**கடகம்** பல நாட்களாக செய்ய நினைத்த வேலையொன்றை இன்று செய்து முடிப்பீர்கள், சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**துலாம்** உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மகரம்** குடும்ப ஒற்றுமைக்கு பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது, தொழிலை விரிவு படுத்தும் எண்ணம் மேலோங்கும் நாள்.

**ரிஷபம்** குடும்பத்தில் சிறு சிறு கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும், உடல் நலன் பற்றிய கவலை உருவாகி மறையும், விரயங்கள் மேலோங்கும் நாள்.

**சிம்மம்** பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்** வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள், நண்பர்களின் ஒத்துழைப்பால் நலம் காண்பீர்கள், தொழில் வளர்ச்சி கூடும், வாக்கு மேன்மையுண்டு.

**கும்பம்** எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மிதுனம்** நண்பர்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாக நடந்து கொள்வர், ஆசைப் பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள், கல்யாணக் கனவுகள் நனவாகலாம்.

**கன்னி** கொள்கைப் பிடிப் போடு செயற்படுவீர்கள், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், இல்லத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், பயணங்களால் பலனுண்டு.

**தனுசு** சோம்பலை விலக்குவது நல்லது, எதிர்பாராத காரியமொன்று நடைபெற்று இன்பம் தரும், உடல் நலனில் கவனம் தேவை, ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள்.

**மீனம்** புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

கடமை தவறாமையும் காலம் தவறாமையும் இரண்டு கண்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் 4

காவியத் தொடர் 894



முதன் மந்திரி அநிருத்தர் ஒழுக்கத்தில் மிகச் சிறந்தவர் என்று நாடெல்லாம் பிரசித்தமாயிருக்க, அவருடைய நடவடிக்கை அதற்கு நேர்மாறாயிருக் கிறதென்றும், கோடிக்கரையிலிருந்து யாரோ ஒரு ஸ்திரீயைப் பலவந்தமாகக் கைப்பற்றி அவர் கொண்டு வந்திருக்கிறார் என்றும், பழுவூர் அரண்மனைப் பல்லக்கையும், ஆள்களையும் இந்தக் காரியத்துக்கு உபயோகப்படுத்தியதாகவும், எதற்காக என்பது தெரியாமல் தாம் ஆள்களையும் பல்லக்கையும் அனுப்பி விட்டதாகவும், ஏதாவது அபகீர்த்தி ஏற்பட்டால் அது பழுவூர்க் குடும்பத்தின் தலையிலே விடியும் என்றும் கூறினார்.

கடைசியாக இன்னொரு சந்தேகாஸ்பதமான சம்பவத்தைப் பற்றியும் சொன்னார். "பெரிய பழுவேட்டரையர் அரண்மனைக்கு யாரோ ஒரு மந்திரவாதி அடிக்கடி வருவதாக அறிந்து நான் கவலை கொண்டிருந்தேன். அவன் இளைய பிராட்டியைப் பார்க்க வருவதாக அறிந்தபடியால் நடவடிக்கை எடுக்கத் தயக்கமாயிருந்தது. ஆயினும், அந்த அரண்மனையின் மீது ஒரு கண் வைத்திருக்கும்படி ஓர் ஒற்றனை நியமித்திருந்தேன். இன்றைக்கு யாரோ ஒருவன் பொக்கிஷ மந்திரியின் அரண்மனைத் தோட்டத்தில் பின்புறமாகச் சுவர் ஏறிக் குதித்ததைப் பார்த்ததாக அந்த ஒற்றன் வந்து சொன்னான். உடனே அவனைக் கைப்பற்றி வரச் சில ஆட்களை அனுப்பினேன். அவர்கள் ஒரு வனை அரண்மனைத் தோட்டத்தில் கையும் மெய்யுமாகப் பிடித்து வந்தார்கள். யார் என்று பார்த்தால், முதன் மந்திரியின் அருமைச் சீடனாகிய ஆழ்வார்க்கடியான் என்று தெரிய வந்தது.

'எதற்காக சுவர் ஏறிக் குதித்தாய்?' என்று கேட்டதற்கு அவன் மறுமொழி சொல்ல மறுத்துவிட்டான். 'முதன் மந்திரியின் கட்டளை' என்றான். சக்கரவர்த்தி! இப்படியெல்லாம் இந்த அநிருத்தப்பிரம்மராயர் செய்து வந்தால், தஞ்சைக் கோட்டைப் பாதுகாப்புக்கு நான் ஏப்படிப் பொறுப்பு வகிக்க முடியும்? என் தமையனாரும் ஊரில் இல்லாதபடியால் இதையெல்லாம் தங்கள் காதில் போட வேண்டியதாயிற்று!"இவ்வாறு சின்னப் பழுவேட்டரையர் முறையிட்டது சக்கரவர்த்தியின் மனக் குழப்பத்தை அதிகமாக்கிற்று. "ஆகட்டும், இன்று மாலை அநிருத்தர் இங்கே வருகிறார். இதைப்பற்றி எல்லாம் விசாரிக்கிறேன். முக்கியமாக, கோடிக்கரையிலிருந்து ஒரு பெண்ணைப் பலவந்தமாகப் பிடித்து வரச் சொன்ன விடயம் என் மனத்தைப் புண்ணாக்கியிருக்கிறது. அது உண்மை தானே! தளபதி! சிறிதும் சந்தேகம் இல்லையே?" என்று கேட்டார்.

"சந்தேகமே இல்லை! பல்லக்குத் தூக்கிகளும் அவர்களுடன் வந்த வீரர்களும் நேற்று நள்ளிரவில் என்னிடம் வந்து சொன்னார்கள். தஞ்சைக் கோட்டையை அணுகிய போது புயலில் சிக்கிக் கொண்டார்களாம். சாலையின் மரம் ஒன்று பெயர்ந்து விழுந்து சிலருக்கு அபாயம் ஏற்பட்டதாம். சிவிகை மீது மரம் விழாமல் தப்பியது பெரும் புண்ணியம் என்று சொன்னார்கள். நல்ல வேளையாக ஸ்திரீஹத்தி தோஷம் ஏற்படாமற் போயிற்று! இதைப் பற்றி விசாரிப்பதோடு ஆழ்வார்க்கடியான் காரியத்தையும் சக்கரவர்த்தி தீர விசாரணை செய்ய வேண்டும்!" (தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## தக தக தங்கக் குதிரை



(25.10.2025அன்றையதொடர்ச்சி)

நினைத்த இடத்திற்கு பறந்து செல்லும் வல்லமை மிக்க இந்த தக தக தங்க குதிரை தங்கள் குதிரையாக வேண்டும் என்றால், மலை உச்சியில் வசிக்கும் மூன்று மந்திர, தந்திர, இந்திர சித்திரக்குள்ளர்களின் மந்திர குடுவையில் இருக்கும் மந்திர நீரை இதன் மேல் ஊற்ற வேண்டும்.

குதிரையின் கண்களில் தெரிந்ததை படித்த பின்னர் இராமநாதனுக்கு தன்னால் தங்க குதிரைக்கு உயிர் கொடுக்க முடியும் என்ற நம்பிக்கை வந்தது, அதே நேரம் சித்திரக்குள்ளர்களைப் பற்றிய பயமும் ஏற்பட்டது, தனக்கு முன்னர் பலர் இக் குதிரையை பார்த்திருப்பாங்க, அப்போ பலர் முயற்சி செய்தும், இது இன்னமும் தங்க குதிரையாகவே இருக்கிறது என்றால் சித்திரக்குள்ளர்களை தேடி போனவர்கள் கதி அதோ கதியாகி இருக்கும், தனக்கு அது நிகழாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று நினைத்து தேரிலிருந்த தன்னுடைய வாளை எடுத்து இடுப்பில் சொருகிக் கொண்டார். தான் கொண்டு வந்த உணவு மூட்டைகளையும், அத்துடன் எதுக்காவது உதவும் என்று கொண்டு வந்த காக்கா முத்துக்களில் சில எடுத்து பையில் போட்டுக் கொண்டார்.மிகவும் கஷ்டப்பட்டு மலையின் மேல் ஏறினார், மலை உச்சியை அடையும் போது சூரியன் மறையும் நேரமாகிவிட்டது, ஒரு வழியாக உச்சியில் ஏறி பார்த்தால் அங்கே பளிங்கு நிறத்தில் பெரிய மாளிகையே இருந்தது, இராமநாதன் தான் நினைத்தப்படியே எல்லாம் நடக்குது, எப்படியும் சித்திர குள்ளர்களுக்கு தெரியாமல் மந்திர நீர் இருக்கும் குடுவையை மட்டும் எடுத்துக் கொண்டு ஒடி விட வேண்டும் என்று நினைத்தார். அதனால் வேக வேகமாக பளிங்கு மாளிகையை நோக்கி விரைந்தார், மாளிகையின் கதவை அடைய இன்னும் 3 அடி தூரம் தான் இருக்கும், திடீரென்று எங்கிருந்தோ வந்து விழுந்த வலையில் மாட்டிக் கொண்டார் இராமநாதன். எவ்வளவோ முயற்சித்தும் தன்னை விடுவிக்க முடியவில்லை, வசமாக மாட்டிக் கொண்டார். என்ன செய்வது என்றே தெரியவில்லை, சித்திரக்குள்ளர்களிடம் மாட்டிக் கொண்டோம், இனிமேல் மற்றவர்களுக்கு ஏற்பட்ட கதி தான் தனக்கும் ஏற்படும் என்று நினைத்த இராமநாதன் மயங்கி விழுந்து விட்டார், ஏற்கனவே மலையை ஏறி வந்தகளைப்பு, மனதில் ஏற்பட்ட பயம் இரண்டும் சேர்ந்து அவரை மயக்க நிலைக்கு கொண்டு சென்றது. கண் விழித்து பார்த்த இராமநாதன் எதிரே கண்ட காட்சியை கண்டு மிரண்டு போய் மீண்டும் மயக்க நிலைக்கு ஆளானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.
– திருக்குறள்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஒழுங்கில் ஒழுங்கீனம் ஒழுங்கீனத்தில் ஒழுங்கு

**ஒழுங்கு** என்ற சொற்பதத்தின் பெறுமதியை நாம் அதிகம் சிந்தித்துப் பார்ப்பதில்லை.

ஆனால் தமிழில் மிகவும் பெறுமதியான சொல் ஒழுங்கு என்பதாகும்.

இங்குதான் ஒழுங்கு என்பதனூடு **ஒழுக்கம்** என்ற உயரிய பண்பு விளைகிறது.

ஆம், ஒழுங்கு என்பது ஒழுக்கத்துக்கு முன்பான ஆயத்தம் என்பதே நம் நிலைப்பாடு. இதில் மாற்றுக் கருத்துக்கள் இருக்கலாம். அவ்வாறு இருந்தாலும் ஒழுக்கம் என்ற சொற்பதத்தைத் தாண்டி ஒழுங்குக்கு விளக்கம் தரமுடியாதென்பதே நம் முடிவு.

இங்குதான் ஒரு விடயத்தை நாம் கூற வேண்டியுள்ளது. அதாவது சமையல் என்ற வினையடியில் இருந்து சமயம் என்பது உருவாயிற்று.

ஆம், சமையல் என்பது பண்படுத்துவது. அரிசி, மரக்கறி மற்றும் தானியங்களை உண்பதாக இருந்தால், அவற்றை சமைத்து உணவாகப் பண்படுத்த வேண்டும். அப்போதுதான் அவற்றை உண்ண முடியும்.

இங்குதான் சமையல் என்ற வினையடியில் இருந்து உற்பவமான **சமயம்** மனிதர்களைப் பண்படுத்துகின்ற கருமத்தை ஆற்றுகிறது.

அதாவது மனிதர்கள் வாழ்வாங்கு வாழ வேண்டுமாயின், அவர்கள் பக்குவப்பட்டவர்களாக ஆக வேண்டும்.

இப்பக்குவம் சிலருக்கு இயல்பானது. இன்னும் சிலருக்கு காலம் தாழ்த்தியேனும் கிடைக்கக் கூடியது.

இன்னும் சிலர் பக்குவத்தைப் பற்றி அறிவர். ஆனால் அதன் வயப்படுவதற்குப் பின்னடிப்பர். மாறாக, இன்னும் சிலரோ பக்குவம் பற்றி மருந்துக்கும் அறிந்திலர்.

இவ்வாறு வேறுபட்ட நிலையைக் கொண்டதே இந்த உலகம்.

ஆனாலும் பண்பறிந்தவர்கள் – ஒழுங்கு கட்டுப்பாட்டில் மிகவும் கண்ணும் கருத்துமானவர்கள் அதிகமாகவும் ஒழுக்கத்தைப் பற்றிய கருசனையற்றவர்கள் குறைவாகவும் இருக்கும் போது, அங்கு ஒழுங்கில் ஓர் ஒழுங்கீனம் ஏற்பட வாய்ப்புண்டு. இந்நிலைமையானது ஏற்புடையது. குறித்த ஒழுங்கீனத்தை நிவர்த்தி செய்ய முடியும்.

தவிர, ஒழுங்கானவர்கள் குறைவாகவும் ஒழுங்கீனம் அதிகமாகவும் இருக்கும்போது, ஒழுங்கீனத்தில் ஓர் ஒழுங்கு கிடைக்கப்பெறும். இந்நிலைமையானது மனதை ஆற்றுப்படுத்தவும் ஒழுங்கீனத்தை குறைப்பதற்கான முயற்சிகளை முன்னெடுப்பதற்கும் வழிவகுக்கும்.

ஆனால் ஒழுங்கில் ஒழுங்கீனமும் இல்லை. ஒழுங்கீனத்தில் ஒழுங்கும் இல்லை எனும் நிலைமையானது,

எங்கும் ஏமாற்று வேலைகள் – போதைப் பயன்பாடுகள் – கொலைகள் – கொள்ளைகள் எனும் சமூக விரோதச் செயல்களே எம் மண்ணில் தலைவிரித்தாடுகின்றன என்பதை சுட்டுவதாகும்.

இத்தகையதொரு அவலமான நிலைமை நம் மண்ணில் இப்போது ஏற்பட்டுள்ளது எனும்போது தான் இதயம் கருகிப் போகிறது.

# சட்டச் சிக்கலைத் தீர்த்தால்
# 2026 இல் மாகாண சபைத்தேர்தல்
## தேர்தல் ஆணைக்குழுத் தலைவர் உறுதி

(கொழும்பு)

மாகாணசபைத் தேர்தலில் காணப்படும் சட்டச் சிக்கலுக்குத் தீர்வு காண்பதற்கு அரசாங்கம் விரைவான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக எமக்குத் தெரியவில்லை.

தேர்தலை நடத்துவதற்குரிய சூழலை ஏற்படுத்திக்கொடுத்தால் அடுத்த ஆண்டு முதல் காலாண்டில் மாகாண சபைத் தேர்தலை நடத்தலாமெனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல் ரத்நாயக்க தெரிவித்தார்.

மாகாணசபைத் தேர்தல் குறித்து வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவறுகளினால் மாகாண சபைத் தேர்தல் காலவரையறையின்றி பிற்போடப்படவில்லை.

பாராளுமன்றத்தில் இயற்றப்பட்ட புதிய தேர்தல் முறைமையினால் ஏற்பட்ட சட்டச் சிக்கலினால் மாகாண சபைத் தேர்தலை எந்த முறையில் நடத்துவது என்பதில் சிக்கல் ஏற்பட்டது.

மாகாணசபைத் தேர்தல் முறைமை தொடர்பில் உயர்நீதிமன்றத்தில் வியாக்கியானம் கோரப்பட்ட போது, பாராளுமன்றத்தின் ஊடாகவே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும்என்று உயர் நீதிமன்றம் பலமுறை அறிவுறுத்தியுள்ளது.

மாகாணசபைத் தேர்தலை நடத்தாமல் ஜனாதிபதியின் நேரடிப் பிரதிநிதியான ஆளுநர்களினால் மாகாண சபைகள் நிர்வகிக்கப்படுவது ஜனநாயக அம்சங்களுக்கு முரணானது என்பதைத் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறோம்.

மாகாண சபைத் தேர்தல் குறித்து இதுவரை காலமும் மேற்கொண்ட சகல நடவடிக்கைகளுக்கும் முழுமையான ஒத்துழைப்பு வழங்கியுள்ளோம்.

மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் அரசியல் தரப்பினர் தற்போது விசேட கரிசனை கொண்டுள்ளமை வரவேற்கத்தக்கது.

மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு நாட்டில் சட்டம் ஒன்று இல்லை. அடுத்தாண்டு முதல் காலாண்டில் மாகாணசபைத் தேர்தலை நடத்துவதாயின் இந்த ஆண்டுக்குள் மாகாண சபை சட்டத்தில் காணப்படும் சட்டச் சிக்கலுக்கு தீர்வு காண வேண்டும்.

மாகாணசபைத் தேர்தலில் காணப்படும் சட்டச் சிக்கலுக்குத் தீர்வு காண்பதற்கு அரசாங்கம் விரைவான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக எமக்குத் தெரியவில்லை.

தேர்தலை நடத்துவதற்குரிய சூழலை ஏற்படுத்திக்கொடுத்தால் அடுத்த ஆண்டின் முதல் காலாண்டில் மாகாண சபைத் தேர்தலை நடத்தலாம் என்றார். (ந-7)

## பிரதேசசபை உபதலைவர் மீது கொடூரத் தாக்குதல்

காலி பத்தேகம பிரதேச சபையின் உப தலைவர் சமன் சி லியனகே கொடூரத் தாக்குதலுக்கு உள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இனந்தெரியாத நபர் ஒருவரால் அவர் இவ்வாறு தாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பிரதேச சபையின் உபதலைவர் அவரது மனைவியுடன் வீடு நோக்கிச் சென்று கொண்டிருந்த போது பத்தேகம, கொடகந்தப் பகுதியில் வீதியை மறித்து அவர் மீது இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

உபதலைவர் தற்போது காலி தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதுடன் தாக்குதல் தொடர்பில் பொத்தல பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை பத்தேகம பிரதேச சபைத் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர் ஒருவரே இத்தாக்குதலை நடத்தியிருக்கலாம் எனச் சந்தேகம் வெளியிடப்பட்ட நிலையில் தாக்குதல் தொடர்பாகப் பொத்தல பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ந-7)

## நாகை கப்பல் சேவை டிசம்பர் வரை நிறுத்தம்

(சென்னை)

நாகப்பட்டினத்துக்கும் காங்கேசன்துறைக்கும் இடையிலான கப்பல் போக்குவரத்துச் சேவை நேற்றுமுதல் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

வடகிழக்கு பருவ மழை தீவிரமடைந்ததாலும் வானிலை மாற்றத்தின் காரணமாகவும் எதிர்வரும் டிசம்பர் மாதம் வரையில் நாகை - காங்கேசன்துறைக்கு இடையிலான பயணிகள் கப்பல் சேவை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது என்று கப்பல் நிறுவனம் அறிவித்துள்ளது. (ந-7)

## போதை வியாபாரத்தில் ஈடுபட்ட ஓய்வு பெற்ற ஆசிரியை கைது

(கம்பளை)

கம்பளை உலப்பனைப் பிரதேசத்தில் வீடொன்றில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையில் ஓய்வு பெற்ற ஆசிரியை ஒருவரும் அவரது மருமகனும் ஐஸ் மற்றும் ஹெரோயின் போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கம்பளைப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து கம்பளை உலப்பனை பிரதேசத்தில் உள்ள வீட்டில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டுவரும் மாமியார், மருமகன் ஆகிய இருவரும் 200 கிராம் ஐஸ் போதைப் பொருளுடன் கம்பளை குற்றத்தடுப்புப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை அவர்களிடமிருந்து இரண்டு தொலைபேசிகளும் மீட்கப்பட்டுள்ளதுடன் குறித்த மருமகன் முச்சக்கரவண்டிச் சாரதியாக உள்ள நிலையில் இவர்கள் கம்பளை, நாவலப்பிட்டி உலப்பனை போன்ற பகுதிகளில் போதைப் பொருள் வியாபாரம் செய்து வந்துள்ளமை தெரிய வந்துள்ளது.

67 வயதுடைய பிரஸ்தாப ஓய்வு பெற்ற ஆசிரியை பல பாடசாலைகளில் கல்வி நடவடிக்கைகளை முன்னெடுத்து வந்த நிலையில் தற்போது ஓய்வு பெற்றிருந்த சந்தர்ப்பத்தில் மருமகனுடன் இணைந்து ஐஸ் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்துள்ளார்.

கைது செய்யப்பட்ட இருவரும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் எதிர்வரும் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை கம்பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-7)

## வெல்லவாயவில் விபத்து நால்வர் படுகாயம்

(வெல்லவாய)

வெல்லவாய - தனமல்விலப் பிரதான வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.


வெல்லவாயப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இரண்டு முச்சக்கர வண்டிகள் ஒன்றுடன் ஒன்று மோதியதில் விபத்துச் சம்பவித்துள்ளது.

விபத்து நடந்த நேரத்தில் இரண்டு முச்சக்கர வண்டிகளிலும் பயணித்த இரண்டு பெண்கள் உட்பட நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.

விபத்தில் படுகாயமடைந்த நால்வரும் வெல்லவாய ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மொனராகலை மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

படுகாயமடைந்தவர்களில் கர்ப்பிணித் தாய் ஒருவரும் அடங்குவதாகத் தெரிவிக்கப்படுகின்ற நிலையில் விபத்துத் தொடர்பில் வெல்லவாயப் பொலிஸ் நிலைய அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்

# ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் நாட்டின் வளர்ச்சி

## பகுதி VI

30

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம். தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

### ஐந்து ஒப்பந்தங்கள்

புது அமைச்சரவை, தன் முதல் வேலையாக, லண்டனில் வரையப்பட்ட அரசியற்றிட்டத்தை ஏற்று அங்கீகரித்தது. இலங்கை, தனது அரசாங்க அமைப்பு முறையின் கட்டுப்பாட்டை நீக்கவும், வெஸ்ட்மினிஸ்டர் அரசியற் சட்டப்படி சட்டமியற்றும் அதிகாரம் தனக்குக் கிடைக்கும்படி செய்யவும், பாதுகாப்பு, வெளிநாட்டு விவகாரம், அரசாங்க உத்தியோகத்தர் பற்றிய விடயங்களைத் தனக்கு ஏற்புடையதாக்கி, ஆணிலப்பத்தை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு ஐந்து ஒப்பந்தங்கள் தேவைப்பட்டன. அவை

(1) சட்டமியற்றும் பூரண அதிகாரம் இலங்கைப் பாராளுமன்றத்துக்கு அளிப்பதற்கும், ஐக்கிய இராச்சிய அரசாங்கத்துக்கு இலங்கை அரசாங்கத்தைப் பற்றிய எவ்வித பொறுப்பும் இல்லாதிருப்பதற்கு, ஐக்கிய இராச்சிய பாராளுமன்றத்தின் இலங்கைச் சுயாட்சிச் சட்டம் (Ceylon Independence Act).

(2) இலங்கை அரசாங்க அமைப்பு முறையில் சுயாட்சியை மட்டுப்படுத்துவன வற்றை நீக்குவதற்கான இலங்கைச் சுயவாட்சி கழகத்துப் பணி (Order in Council).

(3) இலங்கையின் பாதுகாப்புக்குத் தேவையான பாதுகாப்பு ஒப்பந்தம் (Defense Agreement).

(4) வெளிநாட்டு விவகாரங்கள் சம்பந்தமாக சில விடயங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட வெளிநாட்டு அலுவல் ஒப்பந்தம் (External Affairs Agreement).

(5) அரசாங்க உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக இதுவரை ஐக்கிய இராச்சிய அரசாங்கத்துக்கு இருந்த பொறுப்புக்களை இலங்கை அரசாங்கத்துக்கு மாற்றுவதற்காய அரசாங்க அலுவலர்கள் ஒப்பந்தம். (Public Officers' Agreement).

1947 நவம்பர் 11 இல், ஐக்கிய இராச்சிய அரசாங்கத்தின் சார்பில் சேர். ஹென்றி மூரும், இலங்கை அரசாங்கத்தின் சார்பில் சேனநாயக்காவும், கொழும்பில் நகல் ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டனர். இரு நாட்களுக்குப்பின் இலங்கை சுயவாட்சிச் சட்டம், பிரித்தானிய பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. ஐரோப்பியரல்லாத மக்களைக் கொண்ட ஒரு குடியேற்ற நாடு, முதன்முதலாகச் சுதந்திரம் பெறுவதற்கு இலங்கையே முன்மாதிரி என்பதை எல்லோரும் உணர்ந்தனர்.

1947 நவம்பர் 21 இல், பிரித்தானிய பாராளுமன்றத்தில் இலங்கைச் சுயவாட்சிச் சட்டத்தின் இரண்டாவது வாசினையின் பொழுது, ஆத்தர் ஜோன்ஸ் கூறியதாவது, "இலங்கைக்கு எதிர்காலத்தில் பல கஷ்டங்கள் உண்டு. எனினும் அத்தீவின் மக்கள், தம்மிலும், தம் விதியிலும் துணிவும் நம்பிக்கையும், பொதுநலவமைப்பு மட்டில் பிரமாணிக்கமும், எங்கள் மட்டில் நல்லெண்ணமும் கொண்டவர்கள்.

உலகத்தில், அவர்களது பகுதியில் நடைபெற்றுவரும் கஷ்டங்களின் மத்தியில் கூட, அவர்கள் சுதந்திர, ஜனநாயக மக்கள் என்பதை நிரூபிப்பர் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு", என்பதாகும். நவம்பர் 26 இல், பொதுமக்கள் சபையில், சட்டம் நிறைவெய்தியது.

பிரபுக்கள் சபையில் இரண்டாம் வாசினை, டிசம்பர் 4 ஆம் நாள் ஆரம்பமாயிற்று. 10 ஆம் நாளன்று, சுயவாட்சிச் சட்டம், மன்னரின் கைச்சாத்தைப் பெற்றது. ஏககாலத்தில் இலங்கைப் பாராளுமன்றமும் சுயவாட்சி விதிகளை அங்கீகரித்தது. 1948 பெப்ரவரி 4 ஆம் நாள் தான், சுதந்திரம் அடைந்தது.

### எல்லை நிர்ணய ஆணைக் குழுவின் எதிர்பார்ப்பும் தேர்தல் முடிவுகளும்

1947 ஆம் ஆண்டுத் தேர்தல் முடிவுகள், எல்லை நிர்ணய ஆணைக்குழு குறிப்பிட்டதுபோல் சில முடிவுகளைத் தரவில்லை. ஆணைக்குழு எதிர்பார்த்தது போல் ஹப்புத்தளைத் தொகுதியில் தமிழர் வெற்றி பெறாது சிங்களவர் வெற்றி பெற்றதும் பண்டாரவளைத் தொகுதியில் சிங்களவர் வெற்றி பெறாது தமிழர் வெற்றி பெற்றதும் மட்டக்களப்புத் தொகுதியில் தமிழர் வெற்றி பெறாது முஸ்லீம் உறுப்பினர் வெற்றி பெற்றதும் 70% சிங்களவரைக் கொண்ட அளுத்நுவர தொகுதியில் தமிழர் வெற்றி பெற்றதும் குறிப்பிடத்தக்கதாகும்.

சிங்கள மக்களின் செல்வாக்குடன் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சட்டத்தரணி க.வே. நடராசா பண்டாரவளைத் தொகுதியில் 5092 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். 1983ஆம் ஆண்டுக் கலவரத்தின் போது இவருடைய பதுளை வீடு, சொத்துக்கள் எரிக்கப்பட்டதால் அவர் அங்கிருந்து இடம் பெயர்ந்தார்.

எல்லை நிர்ணய ஆணைக்குழு குறிப்பிட்டதுபோல் ஒவ்வொரு சமூகத்திற்கும் கிடைக்கவேண்டிய அங்கத்தவர்கள் எண்ணிக்கையையும் தேர்தலில் கிடைக்கப்பெற்ற அங்கத்தவர்கள் எண்ணிக்கையையும் ஒப்பிடும் போது அட்டவணை - 2இல் காட்டப்பட்டது போல் அமைந்திருந்தது.

அட்டவணை-2

| கிடைக்கவேண்டிய அங்கத்தவர்கள் எண்ணிக்கை | சிங்களவர் | இலங்கைத் தமிழர் | இந்தியர் (முஸ்லீம் தவிர) | முஸ்லீம் | தீர்மானிக்க முடியாத மற்றும் ஏனைய இனத்தவர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| நாட்டின் (1946ம் ஆண்டு) சனத்தொகை அடிப்படையில் | 66 | 12 | 10 | 6 | 1 | 95 |
| மாகாணமட்டத்தில் | 61 | 13 | 8 | 6 | 7 | 95 |
| 1947ம் ஆணடுத்தேர்தல் முடிவுகள் | 68 | 13 | 7 | 6 | 1 | 95 |

நாட்டின் (1946ஆம் ஆண்டு) சனத்தொகை அடிப்படையில் பார்க்கும்போது சிங்களவர்களும் இலங்கைத் தமிழர்களும் கூடுதலான அங்கத்துவத்தைப் பெற்றிருப்பதும் இந்தியத் தமிழர்கள் குறைந்த அங்கத்துவத்தைப் பெற்றிருப்பதும் முஸ்லீம்களுக்கு கிடைக்க வேண்டிய அங்கத்துவம் கிடைத்துள்ளதையும் காணலாம். தொகுதிகள் மாகாண அடிப்படையில் பிரிக்கப்பட்டதால் இவ் வேறுபாட்டை மாகாண அடிப்படையில் பார்ப்பதே சிறந்ததாகும்.

எனவே இதனை மாகாண அடிப்படையில் பார்க்கும் போது சிங்களவர்கள் கூடுதலான அங்கத்துவத்தைப் பெற்றிருப்பதும் இந்தியத் தமிழர்கள் குறைந்த அங்கத்துவத்தைப் பெற்றிருப்பதும் முஸ்லீம்களுக்கும் இலங்கைத் தமிழர்களுக்கும் கிடைக்க வேண்டிய அங்கத்துவம் கிடைத்துள்ளதையும் காணலாம்.

**இலங்கையில் அரசியற் கட்சிகளின் தோற்றம்** - 1931 ஆம் ஆண்டு டொனமூர் அரசியல் யாப்பினூடாக சர்வசன வாக்குரிமை அறிமுகப்படுத்தப் பட்டாலும் பிரித்தானிய மாதிரியிலான பாராளுமன்ற அரசாங்க முறை முழுமையாக அறிமுகப்படுத்தப் படவில்லை. பிரித்தானிய மாதிரியிலான பாராளுமன்ற அரசாங்க முறை என்பது கட்சி முறை அரசாங்கத்திற்குரிய அரசாங்க முறை ஆகும்.

அதாவது பொதுத்தேர்தலில் எக்கட்சிபெரும்பான்மை ஆசனங்களைப் பெற்றுக்கொள்கின்றதோ அந்தக்கட்சியிடம் அரசாங்கத்தை அமைக்கும் பொறுப்பை ஒப்படைக்கும் முறை இதுவாகும். 1935ஆம் ஆண்டு வரை இலங்கையில் அரசியற் கட்சிகளென்பது இருக்கவில்லை.

1928இல் ஏ.ஈ. குணசிங்கா வினால் தொழிற்கட்சி என்ற பெயரில் ஒரு கட்சி உருவாக்கப் பட்ட போதும் அது ஓர் அரசியற் கட்சிக்குரிய பண்புகளைக் கொண்டதாக அமையவில்லை.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரணில் - சஜித்...

கள் அமைக்கப்பட்டுள்ளதுடன் இந்தக் குழுவில் உள்ளவர்கள் கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனவே, பொது வேலைத்திட்டத்தின் கீழ் இணைந்து பயணிப்பதற்குரிய இணக்கப்பாட்டை இரு தரப்புகளும் எட்டியுள்ள நிலையில் இரு கட்சிகளின் தலைவர்களையும் சந்திக்க வைப்பதற்குரிய முயற்சி இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், இரு தலைவர்களும் இணைந்து செய்தியாளர் சந்திப்பொன்றை நடத்த வேண்டும் என்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டு வருகின்றது.

எவ்வாறாயினும் இரு கட்சிகளும் ஒரு கட்சியாக இணைவதற்கு இரு தரப்பிலும் எதிர்ப்புக்களும் கிளம்பியுள்ளன.

எனவே பொது வேலைத்திட்டத்தின் கீழ் ஒன்றிணைந்து, பொதுச் சின்னத்தில் பொதுப் பட்டியலின் கீழ் தேர்தல்களைச் சந்திப்பது பற்றி தற்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ந-7)

## லசந்த படு...

மாலை கெக்கிராவப் பகுதியில் வைத்து குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட தீவிர விசாரணைகளின் பிரகாரமே பிரதான சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 22ஆம் திகதி காலை வெலிகம பிரதேச சபைத் தலைவர் லசந்த விக்கிரமசேகர, அவரது அலுவலகத்திற்குள் வைத்து அடையாளம் தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார்.

அவரின் இறுதிக்கிரியைகள் நேற்று நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## பெருந்தொகை...

இவ்வெடிமருந்துகள் மதவாச்சி பொலிஸ் நிலைய அதிகாரிகள் குழுவினரால் கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வெடிமருந்துகளை அந்த இடத்திற்குக் கொண்டுவந்த நபர்களின் அடையாளத்தைக் கண்டறிய, மதவாச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-7)

## ஒன்றிணையாத

லாப அரசியலுக்காக ஒன்றிணைகின்றனர் என அமைச்சர் சமந்த வித்தியாரத்ன தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மேலும் கருத்துரைத்துள்ள அவர்,

ரணில் - சஜித் ஒன்றிணைவது தேசிய மக்கள் சக்தி அரசுக்கு எவ்விதத்திலும் சவாலாக அமையாது.

“நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருந்த வேளை ரணில் - சஜித் தரப்புகள் ஒன்றிணையவில்லை. போர் நடந்த கால கட்டத்தில்கூட இணைந்து பயணிக்கவில்லை. ஆனால் அவர்கள் தற்போது இணைகின்றனர் எனில் அது அவர்களின் வங்குரோத்து அரசியலை வெளிப்படுத்துகின்றது” என்றார். (ந-7)

## கவிஞர்...

கள் நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளார்.

யாழில் தமிழ் இளைஞர்களின் முயற்சியில் உருவாகும் மில்லர் திரைப்படத்தின் ஆரம்ப நிகழ்வில் பங்கேற்கும் பொருட்டே அவரது யாழ்ப்பாண விஜயம் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## யாழ்ப்பாண...

கான படகை ஒழுங்குபடுத்திக் கொடுத்த நபரின் வீட்டிலிருந்து இரண்டு பிஸ்டல் ரக துப்பாக்கிகள் மற்றும் தோட்டாக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

சந்தேகநபரின் யாழ்ப்பாணத்திலுள்ள வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் குறித்த ஆயுதங்கள் மீட்கப்பட்டதாக கொழும்பு குற்றப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, சம்பந்தப்பட்ட ஆயு[illegible] தங்களை வழங்கியதாகக் [illegible] 43 வயதுடைய முன்னாள் விடுதலைப்

புலி உறுப்பினர் வவுனியாவின் புளியங்குளம் பகுதியில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில், இஷாரா செவ்வந்தி நாடு கடத்திய சம்பவம் தொடர்பாக இதுவரை பத்துப் பேர் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## போதையுடன்...

இச்செயற்றிட்டத்தின் கீழ், போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபடுபவர்கள் மற்றும் அவர்களுக்குத் துணைபோபவர்கள் என அனைவரும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படும் நடவடிக்கை தீவிரப்படுத்தப்படும்.

மேலும் போதைப்பொருள் வர்த்தகர்களுக்குப் பொலிஸ் திணைக்களம், சுங்கத் திணைக்களம், மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம் மற்றும் குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் ஆகியவற்றைச் சேர்ந்தவர்கள் சிலர் உதவி வருகின்றனர்.

போதைப் பொருள் வர்த்தகர்களுக்கு உதவும் வகையில் சட்டவிரோதமான முறையில் வாகனப் பதிவுகள் இடம்பெற்றுள்ளதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, கடந்த காலங்களில் அரசியல் நிழலின் கீழ் சுதந்திரமாக வளர்ந்த போதைப்பொருள் குற்றவாளிகள், இந்த நாட்டையும் சமூகத்தையும் கடுமையாக ஆக்கிரமித்துள்ளனர்.

எனவே போதைப் பொருளை ஒழித்து நாட்டை மீட்டெடுக்கும் நோக்கத்தை அடைவதற்காக முழு நாடுமே ஒன்றாக - தேசிய செயற்றிட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது என்றும் ஜனாதிபதி அநுர தெரிவித்தார். (ந-7)

## பாலகதிர்காமத்தில் சூரசம்ஹாரம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஶ்ரீபாலகதிர்காம தேவஸ்தானத்தில் கந்தசஷ்டி உற்சவமானது சிறப்புற இடம்பெற்றுவரும் நிலையில் இன்று திங்கட்கிழமை சூரசம்ஹாரம் இடம்பெறவுள்ளது.

விசேட வசந்த மண்டபப் பூஜைகள் இடம்பெற்று எம்பெருமான் யுத்த களத்துக்கு எழுந்தருளலைத் தொடர்ந்து 7.30 மணியளவில் சூரசம்ஹாரம் நடைபெறவுள்ளது.

இதன்போது தமிழர்களின் மரபை பறைசாற்றும் வீரதீர சாகச நிகழ்வுகளும் அரங்கேறவுள்ளன. (ந-7)


மஹஜன சம்பத
திகதி 2025.10.26
சீட்டிழுப்பு இலக்கம் 5994
G 4 5 0 4 8 4
அத சம்பத G 0 4 8 4
சீட்டிழுப்பு இலக்கம் 0569

சுப தவசக்
திகதி 2025.10.26
சீட்டிழுப்பு இலக்கம் 110
இடபம் 18 22 55

தன நிதானய
திகதி 2025.10.26
சீட்டிழுப்பு இலக்கம் - 2024
H 15 60 79 80 H

மெகா பவர்
திகதி 26/10/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2342
K 11 03 06 39 72

ஜய JAYA
திகதி 2025.10.26
சீட்டிழுப்பு இலக்கம் 0262
I 5 1 1 8

கோவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4236
சீட்டிழுப்பு திகதி 26.10.2025
O 14 51 69 79
O

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.10.26
சீட்டிழுப்பு இலக்கம் 1303
மேடம் 03 13 24 30 மேடம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
26.10.2025 வெற்றி வாரம் 0702
Y 2 8 7 5 8 3
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.27,230,026.80
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2968
சீட்டிழுப்பு திகதி 2025.10.26 தினம் ஞாயிற்றுக்கிழமை
04 20 55 63 E
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 70,132,375.20

சனிதா
திகதி 26.10.2025 வெற்றி வாரம் 5129
01 10 54 75 Y
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 62,817,959.20

சசிரி
வெற்றி வாரம் 0800
சீட்டிழுப்பு திகதி 26.10.2025 ஞாயிற்றுக்கிழமை
07 18 30
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,000,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4680
சீட்டிழுப்பு திகதி 26.10.2025 தினம் ஞாயிற்றுக்கிழமை
15 25 33 39 மிதுனம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.6,150,598.80

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
S 03 12 32 44 47
சீட்டிழுப்பு வாரம் 2144
26.10.2025
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.602,741,189.80

ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம் : 2794
சீட்டிழுப்பு திகதி : 2025.10.26
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.51,930,434.40
அத கோடிபதி ADA KOTIPATHI
03 44 56 76 G

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
0776336 3378, 076 097 3127


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துப்பாக்கிச்...

இருப்பதாகக் தோன்றுகிறது என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நீதிமன்றத்துக்குள்ளும், பொது மக்கள் சந்திப்பு தினத்தில் பிரதேசசபைக்குள்ளும் சாதாரணமாகச் சென்று துப்பாக்கிச்சூடுகளை நடத்தக் கூடியளவுக்கே இன்று தேசிய பாதுகாப்பு காணப்படுகிறது.

அரசாங்கமே இதற்குப் பொறுப்புக் கூற வேண்டும். பிரஜைகளின் பாதுகாப்பை அரசாங்கமே உறுதிப்படுத்த வேண்டும். பிரஜையொருவர் கொல்லப்பட்டு அவரது மரணம் குறித்த அறிக்கை கிடைக்க முன்னரே, அமைச்சரொருவர் மரணத்துக்கான காரணத்தைக் கூறுகின்றார்.

டான் பிரியசாத் கொல்லப்பட்ட போதும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் இவ்வாறு தான் செயற்பட்டார். இவற்றை அவதானிக்கும் போது இந்தச் சம்பவங்கள் தொடர்பில் உண்மையான காரணிகளை அறிந்து கொண்டு தான் அரசாங்கம் இவ்வாறு செயற்படுவதாகத் தோன்றுகிறது.

இதுவரையில் பதிவாகியுள்ள சுமார் 100 துப்பாக்கிச் சூடுகளில் ஒன்றைப் பற்றியேனும் அரசாங்கம் முறையான விசாரணைகளை முன்னெடுக்கவில்லை. அரசாங்கத்துக்கு தேவையான போது இடம் பெற்றுக் கொண்டிருந்த துப்பாக்கிச்சூடுகள் தற்போது அரசாங்கத்துக்குத் தேவையில்லை என்ற போது நிறுத்தப்பட்டுள்ளன.

அரசாங்கத்தில் முக்கிய கதிரைகளில் அமர்ந்திருப்பவர்கள் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் கிடைக்கப் பெற்ற புலனாய்வுத் தகவல்களை உதாசீனப்படுத்தியவர்களாவர். இவர்கள் தான் போதைப்பொருள் கொள்கலன்கள் தொடர்பில் கிடைக்கப் பெற்ற தகவல்களையும் உதாசீனப்படுத்தி, அவற்றையும் எவ்வித சோதனைகளும் இன்றி விடுவித்துள்ளனர்.

அவர்களே இவ்வாறான சம்பவங்களின் பின்னணியிலும் இருக்கின்றனர் என்றே தோன்றுகிறது. ஏனையோரைப் போன்று என்னை அவ்வளவு இலகுவாக மூக்கால் அழவைக்க அரசாங்கத்தால் முடியாது என்றார். (ந-7)


### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் 4 ஆம் குறுக்குத் தெருவில்
3½ பரப்புக் காணி மாடி வீட்டுடன்
விற்பனைக்குண்டு.
ஆஸ்பத்திரி, தேவாலயம், பொலிஸ் நிலையம்
அருகாமை
(1676)
077 484 5379/021 222 7893


## பாதாள...

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

இது குறித்து மேலும் கருத்துரைத்த அவர்,

குறித்த நான்கு பேர் தொடர்பிலும் தற்போது விசேட சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அவர்கள் பயணம் மேற்கொள்ளும் இடங்கள், பழகும் நபர்கள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பில் விசேட அவதானம் செலுத்தப்படுகிறது.

பொதுமக்களைப் பாதுகாக்க அரசாங்கம் கடமைப்பட்டுள்ளது. ஆனால் பொதுமக்களின் நிதியில் குற்றச் செயல்களுடன் தொடர்புடைய மக்கள் பிரதிநிதிகளுக்கு பாதுகாப்பை வழங்கமுடியாது.

பாராளுமன்றம் மற்றும் பிரதேச சபைகளுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள அனைத்து மக்கள் பிரதிநிதிகளும், பாதாள உலகக் குழுக்கள் மற்றும் போதைப்பொருள் கடத்தல் உள்ளிட்ட சட்டவிரோத குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்களா என்பது தொடர்பிலும் ஆராய அராசாங்கம் அவதானம் செலுத்தி வருகிறது என்றார்.

வெலிகம பிரதேச சபைத் தலைவர் லசந்த விக்ரமசேகரவின் கொலையைத் தொடர்ந்து மக்கள் பிரதிநிதிகள் மற்றும் குற்றங்களுடன் அவர்களுக்குரிய தொடர்புகள் குறித்து உருவான சமூக கருத்துக்களுக்கு மத்தியில் இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7)


### பல ஆயிரம் கடந்த பதிவுகள்...

பல நூற்றுக்கு மேற்பட்ட திருமணங்களை
பொருத்திய சாதனைகள்
உங்கள்
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
உலகின் எப்பாகத்திலிருந்தும்
தொடர்புகொள்ள
www.kalyanamalai.lk
இணையத்தளத்தைப் பாருங்கள்
பதிவுக்கட்டணம் : 4000/= மட்டும்



தொடர்பு – கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P : 021 720 1005
076 097 3120
Email : Kalyanamalai.jaffna@gmail.com



வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

### ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-4196)
076 825 7716 (ஆகாஸ்)



### வேலைவாய்ப்பு

- கணனி தமிழ் ரைப்பிங் மற்றும் பக்க வடிவமைப்பு
  அனுபவமுள்ளவர்கள் மற்றும் பயிலுனர்கள்
  (பெண்கள் – பகல் கடமை
  ஆண்கள் – இரவுக் கடமை)
- உதவி ஆசிரியர்கள்
  (இரு பாலாரும்)
  தகைமை : க.பொ.த உயர்தரம்

யாழ். நகருக்கு அண்மித்து இருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
தொடர்பு :
076 097 3121, 021 222 3378
வலம்புரி நாளிதழ்,
இல.191, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
பொது முகாமையாளர்



### யாழ்ப்பாணத்தில் Voyzant

10 பேர் கொண்ட குழுவில் ஒரு நபரிற்கு - 185,000/=
தென்னிந்திய ஆலய தரிசனம் 09 இரவுகள்/10 நாட்கள்
தமிழ்நாட்டில் பிரசித்தி பெற்ற 35 இற்கு மேற்பட்ட ஆலயங்கள் (மேலும் தனிப்பட்ட கோரிக்கைகளுக்கான சுற்றுலாப் பயணங்களும் மேற்கொள்ளப்படும்.)



மேலதிக விபரங்களுக்கு:
No:617&619, வைத்தியசாலை வீதி,
யாழ்ப்பாணம். (OLR Church இற்கு அருகில்)
077 284 9535, 021 222 6866
Voyzant(PVT)Ltd
(C-4109)



### காணி விற்பனைக்கு

சுன்னாகத்தில் இருந்து புன்னாலைக்கட்டுவன் செல்லும் பிரதான வீதியோரமாக 28 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
வீதியோர முகப்பு 300 அடி நீளம் கொண்டது.
(5747)
076 742 4301, 075 710 9639
(தரகர் தொலைபேசி இலக்கம்)



### விற்பனைக்கு

Forklift Komatsu 2 ton (petrol)
வாகனம் விற்பனைக்குண்டு.
தொடர்பு :
076 097 3121
(க)



கனடா - வரி இல்லாமல்
விரைவு பொதிகள் சேவை

| | |
|---|---|
| 5-9 Kg | 3670/- |
| 11-16 Kg | 2640/- |
| 21-27 Kg | 2440/- |

- குறைந்த விலை -நிறைந்த சேவை
- கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
- 14 நாட்களில் Delivery

(C-4197)

UK 11Kg - 1390/- | France 11Kg - 2220/- | Germany 11Kg - 2010/-
Swiss 11Kg - 2480/- | Australia 11Kg - 2150/- | Italy 11Kg - 2270/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Metro Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241 076 822 6237


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.10.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org